The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும். அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"
Isaiah 62:10

Translated from
BS#953
Mar-April 2026

பொருளடக்கம்

✡ இயேசு கிறிஸ்துவும் ஜெபமும் 2

✡ கிறிஸ்தவனின் சர்வாயுதவர்க்கம் 9

✡ உலக அதிசயங்கள்: தற்செயலானவையா அல்லது தேவனுடைய செயலா? 16

✡ அறிவிப்பு 20

இயேசு கிறிஸ்துவும் ஜெபமும்

Jesus Christ And Prayer

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்: நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன். பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்." (யோவான் 17:4, 5).

இயேசுவின் ஜெபங்களானது, நன்மையான காரியங்களுக்காக தேவனிடம் வெளிப்படையாகவோ அல்லது மௌனமாகவோ ஏறெடுக்கப்பட்ட அவருடைய இருதயத்தின் உண்மையான வாஞ்சைகளாக இருந்தன. இவ்வாறு, அவர் மெய்யான ஜெபத்தை ஏறெடுப்பதற்கான இருதயத்தைக் கொண்டிருந்தார்: அதாவது நன்மையான காரியங்களுக்காகத் தேவனிடம் ஏறெடுக்கப்படும் உண்மையான வாஞ்சைகளாக இருந்தன. ஆம், அவருடைய இருதயம் எப்போதும் ஜெபித்துக் கொண்டிருந்தது. தேவன் அவருக்கு அளிக்க சித்தமாயிருந்த அந்த நன்மையான காரியங்களையே அவருடைய இருதயம் எப்போதும் வாஞ்சித்தது. மேலும், தேவனுடைய மகிமைக்காக தேவன் தமக்காக வைத்திருந்த சித்தம் எதுவோ அதை மட்டுமே அவர் வாஞ்சித்த படியால், அவை முற்றிலும் உண்மையானவைகளாக இருந்தன. அவர் வாஞ்சித்த நன்மையான காரியங்கள் ஏறக்குறைய அனைத்தும் ஆவிக்குரியவைகளாகவே இருந்தன, இருப்பினும் அவற்றில், அவர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்ட பூமிக்குரிய காரியங்களும் அடங்கியிருந்தன.

உண்மையான ஜெபம் ஏழு கூறுகளைக் கொண்டுள்ளது. அவை தேவனை அழைத்தல், துதித்தல், நன்றி செலுத்துதல், அவரைச் சார்ந்திருப்பதை ஒப்புக் கொள்ளுதல், விண்ணப்பித்தல், ஐக்கியம் கொள்ளுதல் மற்றும் நிச்சய உறுதியுடனிருத்தல் ஆகியவையாகும். நம்முடைய ஜெபங்களில் இருப்பதைப் போல, அவருடைய ஜெபங்களில் பாவ அறிக்கை செய்தல் இல்லை என்பதை நாங்கள் சுட்டிக் காட்டுகிறோம், ஏனெனில் அவர் அறிக்கை செய்வதற்கு அவரிடம் பாவங்கள் இல்லை. மேற்கூறிய ஜெபத்தின் ஏழு பகுதிகளையும் அவருடைய எல்லா ஜெபங்களிலும் நாம் காண முடியாது; உதாரணமாக, அவருடைய சில ஜெபங்களில் தேவனை அழைத்தல், நன்றி செலுத்துதல் மற்றும் நிச்சயத்துடனிருத்தல் மட்டுமே இருந்தன, இதை மத்தேயு 11:25,26-ல் உள்ள அவருடைய ஜெபத்தில் காணலாம்: **"பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன், ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்திற்குப் பிரியமாயிருந்தது."** யோவான் 17-ல் உள்ள அவருடைய பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தில், தேவனை அழைத்தல், விண்ணப்பித்தல் மற்றும் நிச்சயத்துடனிருத்தல் ஆகியவை இருந்தபோதிலும், அதன் பெரும் பகுதி தேவனுடனான ஐக்கியங்கொள்ளுதலாகவே இருக்கிறது. அவருடைய எல்லா ஜெபங்களிலும் கீழ்ப்படிதலின் ஆவி இருந்தது, அதை நாம் குறிப்பாக அவருடைய கெத்செமனே ஜெபங்களில் காணலாம். தேவனுடனான அவருடைய ஆவிக்குரிய ஒருமைப்பாடு, அவர் ஜெபிப்பதை மிகவும் பொருத்தமானதாகவும் இயல்பான ஒன்றாகவும் மாற்றியது. அவர் காலை மற்றும் மாலை வேளைகளிலும், உணவருந்தும் போதும், மற்ற எல்லாப் பொருத்தமான நேரங்களிலும் தவறாமல் ஜெபித்தார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்; ஏனெனில் அவருடைய இருதயத்தின் வாஞ்சைகள் எப்போதும் தேவனிடம் சென்றன; மேலும் தேவைக்கேற்ப அவை, தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் பொருத்தமான வழிகளில் தனிப்பட்ட விதத்திலும் பொது ஜனம் மத்தியில் பகிரங்கமாகவும் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்பட்டன.



அவருடைய புது சிருஷ்டிக்கான தேவைகள், குறிப்பாக நெருக்கப்பாதையில் அடிகளை எடுத்து வைப்பதற்கான அறிவுக்காகவும் பலத்துக்காகவும் தூண்டப்பட்டு, அவர் ஜெபித்தார். மேலும் பிதாவினுடைய

COURTESY BY :
The Bible Standard -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

தாராளமான தயாளத்தினால் அவர் உற்சாகமூட்டப்பட்டார். கிருபாசனத்தை கிட்டிச் சேரும்படி தேவன் அவருக்கு விடுத்த அழைப்புகள், தேவையான நேரத்தில் உதவிக் காக அதை அணுகுவதற்கு அவரைப் பெரிதும் தூண்டியது. அவ்வாறே தேவன் அவருக்கு அளித்த அநேக வாக்குத்தத்தங்கள் குறிப்பாக சங்கீதங் களிலும் தீர்க்கதரிசனங்களிலும், தனிப்பட்ட முறையில் ஏசாயா-வில் காணப்படுபவை, அவருடைய விசுவாசம் நிறைந்த ஜெபத்தில் தனக்கென்று உரிமை கோருவதற்கு அவருக்கு தைரியம் அளித்தன. தேவன் அவருக்குச் செவி-கொடுக்கச் சித்தமாயிருந்தது, அவருடைய இருதயத் தின் தேவைகளையும் வாஞ்சைகளையும் தம்முடைய பரம பிதாவாகிய தேவனிடம் ஊற்றுவதற்கு ஒரு பலமான தூண்டுதலாக இருந்தது. அவர் நெருக்கப் பாதையில் தொடர்ந்து முன்னேறிய அளவிற்குத்தக்கதாக, அவரு-டைய ஜெபங்களுக்குக் கிடைத்த பதில்கள் எண்ணிக்கை-யில் அதிகரித்துக்கொண்டே இருந்ததால், அவை அவருடைய விண்ணப்பங்களைத் தேவனுக்கு முன்பாக வைப்பதற்கு, இன்னும் பல ஊக்கமளித்தல்களைக் கொடுத்தன; ஆவியில் தேவனுடனான அவருடைய ஒருமைப்பாட்டின் உணர்வு, சகல கிருபையும் நன்மையும் நிறைந்த தேவனிடம் மன்றாடுவதற்கு அவரைப் பெரிதும் தூண்டியது. அதன்படி, இயேசு ஜெபத்தில் தேவனை அணுகுவதற்குப் பல தூண்டுதல்களைப் பெற்றிருந்தார்.

கர்த்தருடைய ஜெபம்

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்ற முதலாவது விண்ணப்பத்தில் அவரும் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களும் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் ஜெபித்தார்; ஏனெனில் அவ்வாறு செய்வதால் அவர்கள் "நாமம்" என்ற சொல்லின் ஏழு அர்த்தங்களிலும் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப் படுத்தி, அதன் மகிமையைப் பிரதிபலிக்கிறார்கள்.

இரண்டாவது விண்ணப்பத்தில், ராஜ்யம் அதன் இரண்டு நிலைகளிலும் நிறுவப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு நிலைக்கும் உரிய இரண்டு வகுப்புகளாக அமைந்த இரண்டு கூட்டத்தாரும் கீழ்ப்படிதலுள்ள-வர்களுக்கு திரும்பக் கொடுத்தல் வேலையை மேற் கொள்ளவும் ஜெபித்தார்.

மூன்றாவது விண்ணப்பத்தில், ஆயிரம்வருட அரசாட்சியைப் பின்தொடர்ந்து வரும் மகிமையின் யுகங்களுக்காக இறுதியாக நித்திய நீதியானது நிலை-நாட்டப்பட வேண்டும் என்று அவர் ஜெபித்தார். இவ்வாறு, இந்த மூன்று விண்ணப்பங்களிலும், தேவனுடைய திட்டம் அதன் அனைத்துப் பகுதிகளிலும் வெற்றிகரமாக நிறை-வேற்றப்பட வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.



நான்காவது விண்ணப்பத்தில், ஆவிக்குரிய ஆகார-மாகிய சத்தியத்தையும், அதேபோல் தனது சரீரத்திற்கு தேவையானவற்றையும் வழங்கும்படி அவர் தேவனிடம் வேண்டினார்.

அவர் தமக்காக ஏறெடுத்த விண்ணப்பங்களின் சுருக்கம் சந்தேகத்திற்கு இடமின்றி கர்த்தருடைய ஜெபத்தில் உள்ளடங்கியிருந்தது; ஆனால் ஐந்தாவது விண்ணப்பமான, **"எங்களுக்கு கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"** என்பது மட்டும் இதில் விதிவிலக்கு, ஏனெனில் அவர் மன்னிப்புக் கேட்பதற்கு அவரிடம் பாவம் ஏதும் இல்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

ஆறாவது விண்ணப்பத்தில், அவருடைய சோதனை-களின்போது தேவன் தம்முடைய ஆவியினாலும், வார்த்தையினாலும், பரிபாலனத்தினாலும் தேவையான உதவிகளுடன் தனது பட்சத்தில் நிற்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார்.

ஏழாவது விண்ணப்பத்தில், சாத்தானுடைய நேரடி யான தீமையான தாக்குதல்களையும், உலகம் மற்றும் அவருடைய மாம்சத்தின் மூலமான – மறைமுகமான தீமையான தாக்குதல்களையும் மேற்கொள்வதற்கும், தமது ஓட்டம் முழுவதும் தமக்கு ஜெயம் அளிப்பதற்கும் தேவையான கிருபைக்காக அவர் ஜெபித்தார். இந்த வேண்டுதல்களை நாம் கவனிக்கும் போது, அவை அவருடைய தனிப்பட்ட தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கியது என்பதையும், அதோடு பாவங்களுக்கான மன்னிப்பைச் சேர்ப்பதன் மூலம், யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டத்துடன் தொடர்புடைய சபை மற்றும் உலகத்தின் தேவைகளையும் உள்ளடக்கியது என்பதை-யும் நாம் அறிகிறோம்.

அவருடைய ஜெபங்களுக்கான பதில்கள் நிபந்-தனைக் குட்பட்டதாயிருந்தன. அதாவது அவருடைய மனுஷீகமானது அவருடைய இருதயத்தில் எழுதப் பட்டிருந்த இயற்கைப் பிரமாணத்திற்கும், மோசேயின்

நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவதின் பேரிலும், அவருடைய புது சிருஷ்டியானது அவருடைய பலியின் உடன்படிக்கைக்கு, கீழ்ப்படிவதின் பேரிலும் சார்ந்திருந்தது. இது அவருடைய நெருக்கப் பாதையின் ஏழு வகையான எல்லா படிகளிலும் விசுவாச உண்மைத்துவமுடனிருக்க வேண்டியதைக் குறிப்பாக உணர்த்துகிறது. மேலும் அவர் ஒரு மனிதனாகத் தமது இருதயத்தில் எழுதப்பட்டிருந்த இயற்கைப் பிரமாணத்திற்கும், மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் பூரண கீழ்ப்படிதலைக் காண்பித்ததால், ஒரு மனிதனாகவும் ஒரு யூதனாகவும் தன்னுடைய மனுஷீகத்தை தேவனால் ஏற்றுக் கொள்ளத்தக்க பலியாகத் தொடர்ந்து செலுத்தினார், இதன் பலனாக, பலியாக அர்ப்பணிக்கப்படுவதற்கு இணக்கமாக அவரது மனுஷீகத்திற்கு தேவையான – உணவு, உறைவிடம், உடை போன்றவை தேவைக்கேற்ப அவருக்கு வழங்கப்பட்டன. மேலும் அவர் தமது நெருக்கப் பாதையின் ஏழு வகையான படிகள் ஒவ்வொன்றிலும் தமது பலியின் உடன்படிக்கையை அவர் படிப்படியாக நிறைவேற்றுகையில், தம்முடைய புது சிருஷ்டியின் ஒவ்வொரு தேவைக்கும் தேவையானது வழங்கப்படும்படி, கிருபாசனத்தை அணுகும் சிலாக்கியத்தை தேவன் அவருக்குப் பரிசாக அளித்தார். அவைகளுக்கான தேவைகளுக்காக ஏறெடுக்கப்பட்ட அவருடைய ஜெபங்கள் எப்போதும் பதிலளிக்கப்பட்டன: **"பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்."** (யோவான் 11:41).

ஓ, விசேஷமாக தலையாகிய அவருக்கும், சரீரமாகிய சபைக்கும், **"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு: நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப் படுத்துவாய்"** என்ற வாக்குத்தத்தம் பொருந்தியது. (சங்கீதம் 50:15). எனவே, அவருடைய ஜெபங்கள் தேவனுக்கு முன்பாகத் தூபவர்க்கமாகச் சென்றன–அவை மிகவும் பிரியமாவைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன, ஏனெனில் அவை குணப் பண்புகளினால் மிகுதியாக நிறைந்திருந்தன, குறிப்பாக அந்த கிருபைகள்/குணாம்சங்கள் அவருடைய சோதனைகள், பரீட்சைகள் மற்றும் உபத்திரவங்களின் மத்தியில் செயல்பட்டவைகளாக இருந்தன. தமது ஜெபங்களில் தெய்வீக அங்கீகாரத்தின் நிச்சயத்தை அவர் எவ்வளவாய் அனுபவித்திருக்க வேண்டும்! அவர் தமது பிதாவோடு பேசும் போதும் அவரோடு இருக்கும்போதும் அவருடைய மகிழ்ச்சியும் அன்பும் எவ்வளவாய் இருந்திருக்க வேண்டும்; ஏனெனில் தாம் பிதாவிற்குப் பிரியமானவர் என்பதை அவர் எப்போதும் தமது இருதயத்தின் ஆழத்தில் அறிந்திருந்தார்; அதுவே அவருக்குப் பூரண திருப்தியாக இருந்தது. இயேசு கிறிஸ்துவிடமிருந்து, அவருடைய ஆவியில் கிருபாசனத்தை அணுகுவதற்கு நமக்குள்ள சிலாக்கியங்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வோமாக; அப்போது மெய்யான ஐக்கியத்தை உண்டாக்குகிற பிதாவின் மிகச் சிறந்த வரவேற்பை நாம் எப்போதும் அங்கே காண்போம்!

நமது ஆய்வுக்காக இயேசுவின் சில ஜெபங்களைச் சுருக்கமாகச் சிந்திப்பது பயனுள்ளதாக இருக்கும். கர்த்தர் கற்பித்த ஜெபத்தில் அவருடைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு அமைந்த விண்ணப்பங்களை ஏற்கனவே சுருக்கமாகக் கவனித்தோம், இப்போது மற்ற சிலவற்றை கவனிப்போம். அவர் தமது ஞானஸ்நானத்தின் போது ஜெபித்தார் (லூக்கா 3:21), பிரசங்க ஊழியப் பயணத்தில் இருந்தபோது தனிப்பட்ட முறையிலும் (மாற்கு 1:35; லூக்கா 5:16), பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுப்பதற்கு ஆயத்தமாகும் போதும் (லூக்கா 6:12), மறுரூபமான அனுபவ சந்தர்ப்பத்திலும் (லூக்கா 9:28, 29) மற்றும் பேதுருவுக்காகவும் (லூக்கா 22:32), மேலும் பொது ஜனங்களுக்கு முன்பாக, ஸ்திரீகளும் பிள்ளைகளும் தவிர 5,000 மற்றும் 4,000 புருஷர்களுக்கு உணவளித்த போதும் (மத்தேயு 14:19, 23; மாற்கு 8:6), கர்த்தருடைய இராபோஜனப் பந்தியில் அப்பம் மற்றும் திராட்சரசத்தைக் குறித்தும் (மத்தேயு 26:26, 27; மாற்கு 14:22, 23; லூக்கா 22:17,19,32; 1 கொரிந்தியர் 11:23-25), எழுபது பேர் திரும்பி வந்து அறிக்கை செய்த போதும் (லூக்கா 10:21), சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்த போதும், எருசலேமிலும் (யோவான் 12:27, 28) மற்றும் மேலே விளக்கப்பட்டபடி கெத்செமனேயிலும் (மத்தேயு 26:36-44) ஜெபித்தார்.

மேற்கூறப்பட்ட நிகழ்வுகளில், எழுபது பேரின் அறிக்கையைப் பெற்ற போதும், யோவான் 12:27,28-லும் மற்றும் கெத்செமனே ஆகிய நிகழ்வுகளைத் தவிர, மற்ற எந்தவொரு நிகழ்வுகளிலும் அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் கொடுக்கப்படவில்லை. அவருடைய ஜெபத்தின் வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த நிகழ்வுகளைப் பற்றிய சில குறிப்புகளைச் சேர்க்க நாங்கள் விரும்புகிறோம். அந்த எழுபது பேர் திரும்பி வந்து, தங்கள் ஊழியத்தினால் நிகழ்த்தப்பட்ட பல்வேறு ஆசீர்வாதத்தின் அம்சங்களை விளக்கிக் காண்பித்த போது, சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர்கள் மகிழ்ச்சியோடு தங்களுக்குச் செவிகொடுத்தார்கள் என்றும், ஆனால் பரிசேயர்களும் வேதபாரகர்களும் சாதகமான பதிலைக் கொடுக்கவில்லை என்றும் அவர்கள் அறிக்கை செய்ததை இயேசுவின் ஜெபத்திலிருந்து நாம் அறிந்துகொள்கிறோம். (லூக்கா 10:21). அவர்களுடைய அறிக்கையின் இந்த அம்சம் அவரை ஆவியில் களிகூரவும், ஜெபிக்கவும் தூண்டியது: **"பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், ஆம், பிதாவே!**

இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்திற்குப் பிரியமா யிருந்தது." இந்த ஜெபத்தில் எந்த விண்ணப்பமும் ஏறெடுக்கப்படவில்லை; ஆனால் தேவனுடைய திட்டத்தின் அந்த அம்சத்தில் அவருடைய ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பு ஆகியவை அதன் தெரிந்தெடுப்பு தொடர்-பான சிறப்பம்சங்களைப் பெருமையுள்ளவர்களுக்கும், தலைக்கனம் உள்ளவர்களுக்கும், தன்னிறைவுள்ளவர்-களுக்கும் மறைத்து, அவைகளைச் சாந்தமும் மனத் தாழ்மையுமுள்ளவர்களுக்குத் தெளிவாக்கிய, அந்த அம்சத்திற்காக இயேசுவானவர் களிகூர்ந்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

இது இரண்டு வகுப்பினரின் நலனுக்காகவும் இருந்தது: ஒன்று பாலகர்களுக்கு, அதாவது திட்டத்தின் தெரிந்தெடுப்பு அம்சங்களின் கீழ் சோதனைக்குத் தகுதி-யுள்ளவர்களாக இருந்தவர்கள், மற்றொன்று மற்றவர்-களுக்கு, அதாவது அதற்குத் தகுதியற்றவர்களாக இருந்தவர்கள், ஆகையால் இலவச கிருபையின் அம்சங்கள் அவர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும். எனவே இந்த இரண்டு வகுப்பினரையும் குறித்த தேவனுடைய தற்போதைய நோக்கங்களுக்காக இயேசு-வால் களிகூர முடிந்தது. லாசருவின் கல்லறையில் நம்-முடைய கர்த்தர் விண்ணப்பம் ஏதுமில்லாத ஒரு குறிப்பிடத்தக்க ஸ்தோத்திர ஜெபத்தை ஏறெடுத்தார்; இருப்பினும், அந்த ஜெபத்தில் விண்ணப்பமானது முன்னமே ஏறெடுக்கப்பட்டிருந்தது என்பதை உணர்த்து-கிறது: "**இயேசு... பிதாவே, நீர் எனக்குச் செவி கொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்: ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்.**" (யோவான் 11:41,42). இயேசு இங்கே கூறுகிறபடி, அவர் செய்யப் போகும் அற்புதமானது, அவர் தேவனுடைய தூதுவர் என்பதை அங்கே இருந்த ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு, அவர்கள் நிமித்தமாகவே இந்த ஸ்தோத்திர ஜெபத்தை ஏறெடுத்தார். அந்த ஜெபம் எவ்வளவு எளிமையானதாக இருக்கிறது! அது எவ்வளவு உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது! பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள ஒருமைப்பாட்டை அது எவ்வளவு முழுமையாக வெளிப்படுத்துகிறது!

இயேசுவின் பிரதான-ஆசாரியத்துவ ஜெபம்

யோவான் 17-ல் நம் கர்த்தருடைய மிகவும் நீண்டதும் மிகவும் ஆழமானதுமான ஜெபம் அவருடைய பிரதான ஆசாரியத்துவ ஜெபமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஐந்து விண்ணப்பங்கள் மட்டுமே செய்யப் பட்டுள்ளன; அவைகளில் ஒன்று தமக்காக, பிதா தம்மை மகிமைப் படுத்தும்படிக்கும் (வசனம் 1,5); அதில் மூன்று



விண்ணப்பங்கள் அப்போஸ்தலர்களுக்காகவும்: (1) பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருப்பதற்காக (வசனம் 11), (2) அவர்கள் பொல்லாங்கனிடமிருந்து காக்கப்படுவதற்காக (வசனம். 15), மற்றும் (3) அவர்கள் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுவதற்காக (வசனம் 17); மற்றும் ஒரு விண்ணப்பம் சபையின் எஞ்சியவர்களுக்காக, அதாவது தேவனும் கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறது போல அவர்-களும் ஒன்றாயிருப்பதற்காக (வசனம் 21) விண்ணப்பம் செய்தார்.

யோவான்17-ம் அதிகாரம் பிதாவுடனான கிறிஸ்து-வின் ஐக்கியத்தை விவரிக்கிறது. இந்த ஐக்கியத்தைப் பற்றி நாம் சுருக்கமாகத் தொகுத்துரைப்போம். தமது வேளை வந்துவிட்டது என்பதைப் பற்றியும் (1), இரட்சகராகத் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணி பற்றியும் (2), இரட்சிக்கப்பட்டவர்கள் எந்த நோக்கத்திற்காக நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என்பதைப் பற்றியும் (3), தமது ஊழியத்தை அவர் உண்மைத்துவத்துடன் செய்து முடித்தது பற்றியும் (4), உலகம் உண்டாவதற்கு முன்னமே இயேசு பிதாவுடன் இருந்த காலத்தைக் குறித்தும் (5), தேவன் தமக்குக் கொடுத்த தேர்ந் தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களுக்கு, தேவனை அவரு டைய நாமத்தின் அர்த்தத்தில் வெளிப்படுத்தியதைக் குறித்தும், அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கைக் கொண்டிருப்பதைப் பற்றியும் (6), அவர்கள் அவருடைய உத்தியோக அதிகாரங்களில் அவரை அறிந்தவர்களா யிருந்ததைப் பற்றியும் (7), இயேசுவின் ஊழியத்திற்காக ஒப்படைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை அவர் யாருக்குக் கொடுத்தாரோ, அவர்கள் அவரைப் பரலோகத் திலிருந்து பூமிக்கு தேவனுடைய தூதுவராக வந்திருக் கிறார் என்ற முழு நிச்சயத்துடன் அவைகளை ஏற்றுக் கொண்டனர் என்பதைப் பற்றியும் (8), உலகத்திற்காக அல்லாமல், தேவன் தமக்குக் கொடுத்த ஈவுகளாகிய அவர்களையே தமது பரிந்துரைக்குரியவர்களாக ஆக்கி-

யிருப்பதைப் பற்றியும் (9), அவர் தேவனுடனான தமக்குள்ள பங்கு உரிமையைப் பற்றியும், தமது அப்போஸ்தலர்களில் தாம் மகிமைப் படுத்தப்படுவதை-யும் அங்கீகரித்திருப்பதைப் பற்றியும் (10), பூமியில் தமது தங்குதல் முடிவுக்கு வருவதையும், தாம் விரைவில் தேவனிடம் செல்லவிருப்பதையும் உணர்ந்து, தேவனும் தாமும் ஒன்றாயிருக்கிறது போலவே, அவர்களும் ஒன்றா யிருக்கும்படி தேவனுடைய குணாம்சத்தின் வல்லமை-யினால் அவர்களும் கொண்டு வரப்பட்டு காக்கப்படுவது பற்றியும் பிதாவிடம் தெரிவித்தார் (11). பின்னர், வேதாகமத்தில் கெட்டுப்போனவனாக முன்னறிவிக்கப் பட்ட இரண்டாம்-மரணத்திற்குரியவனான யூதாஸைத் தவிர, தாம் அவர்களோடு இருந்தபோது தேவனுடைய குணாம்சத்தினால் அவர்களைக் காத்துக்கொண்டதாக பிதாவிடம் கூறுகிறார் (12). தாம் பிதாவிடம் செல்லவிருந்த நிலையில், அவர்களும் அவருடன், அவருடைய சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு அந்த வார்த்தையை அவர்களுக்கு தெளிவுபடுத்தியதாக அவர் அறிவிக்கிறார் (13). அவர்கள் தம்மிடமிருந்து அந்த தேவ வார்த்தையைப் பெற்றுக் கொண்டதால், உலகம் தம்மைப் பகைத்தது போலவே, அவர்கள் மீதும் பகைமையைக் கொண்டுவந்துள்ளது என்று அவர் அறிவிக்கிறார் (14). அவர்கள் உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் வேண்டவில்லை, மாறாக அவர்-கள் பொல்லாங்கனிடமிருந்து தேவனால் காக்கப்பட வேண்டும் என்று வேண்டினார் (15). ஏனெனில் அவரைப் போலவே அவர்களும் உலகத்தார்கள் அல்ல (16). பின்னர் அவர்கள் சித்தம், சரீரம் மற்றும் ஆவியிலே தெய்வீக சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்று ஜெபிக்கிறார் (17). ஏனெனில், தேவனால் தாம் அனுப்பப்பட்டதைப் போலவே, அவர் அவர்களை சுவிசேஷ-யுக ஊழியத்திற்காக உலகத்திற்குள் அனுப் பியதாகக் கூறுகிறார் (18). அவர்கள் சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்படுவதற்காக, அவர் சித்தம், சரீரம் மற்றும் ஆவியில் தம்மையே பரிசுத்தப்படுத்திக் கொண்டதாகக் கூறுகிறார் (19). ஒரு திறமையுள்ளப் பரிந்து பேசுகிற-வராக அப்போஸ்தலர்களைப் பற்றிய சாத்தியமான அனைத்து நன்மையான காரியங்களையும் கூறி, அவர்களுக்கு எதிராக எந்த தீமையையும் குறிப்பிடாமல், எவ்வாறாக அவர்களைத் தேவ தயவிற்கு பரிந்துரைக் கிறார் என்பதைக் கவனியுங்கள்.

அப்போஸ்தலர்களுக்காகத் தமது மூன்று விண்ணப் பங்களை அவர்களைப் பற்றிய பாராட்டு குறிப்புகளுடன் முன் வைத்த பின்பு, அப்போஸ்தலர்களுடைய வார்த்தை-யின் மூலமாக அவர் மீது விசுவாசிகளாகும் சபையின் மற்ற அங்கத்தினர்களுக்காகவும் அவர் ஜெபிக்கத் தொடங்குகிறார் (20). இறுதியாக ஆயிரம் வருட யுகத்தில் உலகமானது விசுவாசத்திற்குள் கொண்டுவரப்படும்-படிக்கு, தேவனும் அவரும் ஒன்றாயிருப்பது போல, அவர்கள் அனைவரும் ஒன்றாயிருக்கும்படிக்கு அவர் வேண்டுதல் செய்கிறார் (21). தேவனும் இயேசுவும் ஒன்றாயிருப்பது போலவே அவர்களும் ஒன்றாயிருக்கும்-படிக்கு, பிதா அவருக்கு அளித்த பரம அழைப்பின் கனத்தை, அவர் அவர்களுக்கும் அளித்தார் (22). அவர் விவரிக்கும் இந்த ஒருமைப்பாடானது, பிதாவிலும் தன்னிலும் இருந்த அதே ஆவியின் ஒருமைப்பாடு என்றும், அவர்கள் ஒருமைப்பாட்டில் பூரணப்படு வதற்கும், இறுதியாக ஆயிரம் வருட யுகத்தில் உலக-மானது அவரைத் தேவனுடைய தூதுவராக அங்கீகரிப் பதற்கும், இயேசுவின் மேல் தேவன் வைத்திருக்கும் அதே வகையான அன்புடன் தேவன் சபையையும் நேசிக்கிறார் என்பதை உலகம் அறிந்துகொள்வதற்கும் இது ஏதுவாகிறது (23). பின்னர், சிருஷ்டிப்புக்கு முன்பே தேவன் அவர் மீது வைத்த அன்பின் நிமித்தமாக அவர்களை மகிமை, கனம் மற்றும் அழியாமை ஆகிய-வற்றில் தமது உடன் பங்காளிகளாக்கவும், தேவனுடைய ஈவில் அவருக்குள்ள உயர் ஸ்தானத்திற்கு அவர்களைச் சாட்சிகளாக ஆக்கும் தேவனுடைய திட்டத்துடன் தாம் முழு இணக்கத்துடன் இருப்பதை அவர் வெளிப்படுத்துகிறார் (24). அவர் தேவனுடைய நீதியை அறிந்துகொண்டு, உலகம் தேவனை மதித்துணராத போதிலும், அவர் எப்போதும் அவரை மதித்துணர்ந்து போற்றுகிறார் என்றும், தம்முடையவர்களால் தாம் தேவனுடைய ஸ்தானாபதியாக (தூதுவராக) அங்கீகரிக்கப்பட்டார் என்றும் கூறுகிறார் (25). ஆம், அவர் தேவனுடைய பெயரை மட்டுமல்ல, அவருடைய சுபாவம், குணாம்சம், கீர்த்தி, உத்தியோகம், கனம் மற்றும் வார்த்தை ஆகிய-வற்றையுங்கூட அவர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் அவர் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட அதே வகையான அன்பை, அதே அளவில் இல்லாவிட்டாலும், அதை அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அவருடைய ஆவி அவர்களுக்குள் இருக்கும்-படி அவர் தொடர்ந்து அதனை வெளிப்படுத்துவார். (26).

நம் கர்த்தர் எவ்வளவு வல்லமையோடும் உண்மைத் துவத்தோடும் பரிந்து பேசுகிறார் என்பதற்கு ஒரு சிறப்பான வெளிப்பாடாக இந்த ஜெபம் இருக்கிறது! எளிமை, மேன்மை, ஐக்கியம், பரிந்து பேசுவதில் உள்ள நேர்த்தி, அன்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றில், இது பதிவு செய்யப்பட்ட மற்ற எந்த ஜெபத்தையும் விட விஞ்சியதாக இருக்கிறது. இந்த ஜெபம் பரலோகத் தூபமாக தேவனுக்கு முன்பாகப் பிரவேசித்தது; சுவிசேஷ-யுகம் முழுவதின் விளைபலனாக உருவான சபையே இந்த ஜெபத்திற்கு பிதா அளித்த பதிலாகும். இந்த ஜெபமானது, இயேசு மேல்வீட்டு அறையை விட்டு கெத்செமனேக்குப் புறப்படுவதற்குச் சற்று முன்பு ஏறெடுக்கப்பட்டதால், அந்த நிகழ்வு உண்மையைக்

கருத்தில் கொள்ளும் போது அதன் உள்ளடக்கங்கள் இன்னும் அதிக கவனத்துக்குரியதாகிறது. தேவனுடைய ஜனங்களின் பரிந்து பேசுகிறவராகிய இயேசுவின் இந்த ஈடு இணையற்ற பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தை ஆழ்ந்து சிந்திப்பதும், அதிலிருந்து ஆறுதலைப் பெற்றுக் கொள்வதும் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஆசீர்வதிக்கப் பட்ட ஒரு பயிற்சியாகும்.



சிலுவையில் இயேசுவின் ஜெபங்கள்

இவற்றில் முதலாவதானது, தான் செய்வது இன்னதென்று அறிந்திருந்த யூதாஸைத் தவிர, தமது சிலுவையில் அறையப்படுதலோடு தொடர்புடைய அனைவருக்காகவும் அவர் ஏறெடுத்த ஜெபமாகும்: **"பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்."** (லூக்கா 23:34). சில பழமையான கையெழுத்துப் பிரதிகள் இந்த வார்த்தைகளைத் தவிர்த்துள்ளன; ஆனால் வேதாகம எண் கணிதமுறை இவை உண்மையானவை என்று நிரூபிக்கின்றன. எனவே, இது உண்மையில் இயேசுவால் ஏறெடுக்கப்பட்டது; இது தமது சத்துருக்களிடம் அவர் கொண்டிருந்த அன்பையும் மன்னிக்கும் ஆவியையும் நிரூபிக்கிறது. ஆனால் இந்த ஜெபத்தை சிந்திக்கும் போது, இயேசுவின் மரணத்திற்கு காரணமானவர்களுடைய துணிகர பாவம் மன்னிக்கப்படும்படி அவர் ஜெபித்தார் என்று நம்புகின்ற தீவிர நிலைக்கு நாம் செல்லக்கூடாது. இயேசு மனிதனின் பாவத்திலுள்ள துணிகரத்திற்காக பாவநிவிர்த்தி செய்யவில்லை என்பதால், அது திரள்கூட்டத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள சிலாக்கியமானது; ஆனால் மனுக்குலத்தின் பாவங்களில் உள்ள ஆதாமிய அம்சங்களுக்காக - அதாவது அறியாமையினால் அல்லது பலவீனத்தால் அல்லது இவை இரண்டும் கலந்து செய்த பாவங்களுக்காகவே பரிகாரம் செய்தார். துணிகர பாவத்தை தேவன் மன்னிக்கமாட்டார் என்பதையும், அதை அவர்கள் தண்டனைகள் மூலம் ஈடு செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருந்த எளிய காரணத்தால், இயேசு தம்மைத் துன்புறுத்தியவர்களின் துணிகர பாவத்திற்காக ஜெபிக்கவில்லை, மேலும் அது அவருடைய சித்தத்திற்கு எதிரான ஒரு விஷயமாக இருப்பதால், அவர் தேவனிடம் அதை மன்னிக்கும்படி ஜெபிக்கவில்லை. தேவன் அந்த துணிகரத்தை மன்னிக்காமல் அதற்காக அவர்களை 1845 வருடங்கள் துன்பம் அனுபவிக்கச் செய்தார் என்பதை வரலாறு நிரூபிக்கிறது. அவர் அவர்களின் பாவத்திலுள்ள அறியாமைக்காகவே மன்னிப்பு வேண்டினார் என்பதை இயேசுவின் வார்த்தைகளே உணர்த்துகின்றன-**"தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே:** யூதாஸ் அறிந்திருந்தது போல, அவர்கள் அதை **அறிந்திருந்தார்களானால் மகிமையின் கர்த்தரைச் சிலுவையில் அறையமாட்டார்களே."** (1 கொரிந்தியர் 2:8). பிதாக்களின் நிமித்தம் அவர்கள் இன்னும் அன்பு கூரப்பட்டவர்களாய் இருப்பதால் சுவிசேஷ-யுகம் முழுவதிலும் அவர்களைப் பாதுகாப்பதும், துணிகர பாவத்தில் ஈடுபட்ட இஸ்ரயேலர்களை கடுமையான தண்டனைகளால் நிவிர்த்திசெய்ததும், இயேசுவின் இந்த பொருத்தமான ஜெபத்திற்கு ஆக்கபூர்வமாக அளிக்கப்பட்ட பதிலின் நிகழ்வு உண்மையாகும். நம்மை பகைக்கிறவர்களுக்காகவும் நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் என்ற தமது போதனையை இயேசு நடைமுறைப் படுத்தினார் என்பதற்கு இந்த ஜெபமானது மனதில் ஆழமாகப் பதிகிற ஆதாரமாகும்.

சிலுவையில் இயேசுவின் இரண்டாவது ஜெபம்: **"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"** (மத்தேயு 27:46; மாற்கு 15:34). அவர் கடவுளும் மனிதனும் கலந்தவராக இருந்திருந்தால், இந்த ஜெபத்தை ஏறெடுத்திருக்க முடியாது; ஏனெனில், அந்த கொள்கையின்படி, அவரே தேவனாயிருப்பதால் தம்மைத் தாமே கைவிட முடியாது. ஆனால் அவர் ஒரு மனிதனாக இருந்ததாலும், அவருடைய புது சிருஷ்டி ஆசாரியராக அவரில் வாசமாயிருந்ததாலும், அந்தப் புது சிருஷ்டியே அவருடைய மனுஷீகத்தைப் பாவ-நிவாரண பலியாகப் பலியிட்டுக் கொண்டிருந்ததாலும், இந்தக் கூப்பிடுதலை நம்மால் எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது. சங்கீதம் 22:1-18 வரையுள்ள வசனங்கள் நிரூபிக்கிறபடி, இது அவர் மரிப்பதற்குச் சற்று முன்பே நிகழ்ந்தது, மேலும் இது அவருடைய புது சிருஷ்டியால் அல்ல, அவருடைய மனுஷீகத்தினால் கூறப்பட்டது. ஆதாமுக்குப் பதிலாளாக ஆதாம் தன் பாவத்திற்காக அனுபவித்த அனைத்தையும் அவர் தமது மனுஷீகத்தில் அனுபவிக்க வேண்டியிருந்தது. ஆதாம் தன் பாவத்திற்காக அனுபவிக்க வேண்டிய காரியங்களில் ஒன்று தேவனால் கைவிடப் பட்டதாகும். எனவே இயேசு, ஆதாமுக்குப் பதிலாளாக அந்தச் சாபத்தின் இந்தப் பகுதியை அனுபவிக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக, ஒரு பூரணமான பாவமற்ற மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய தீமையின் உச்சகட்டமான தேவனால் கைவிடப்படுதலை-அவருடைய மனுஷீகம் ஒரு குறிப்பிட்ட நேரம் அனுபவித்தது; ஏனெனில் தேவனால் கைவிடப்பட்டோம் என்ற அந்த

பயங்கரமான எண்ணத்தின் தாக்கம் அவரைத் தாக்கிய போது, அவர் ஒரு பாவமற்ற மனிதனாகத் தமது மனிதத் துயரங்களின் உச்சத்தில்: **"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"** என்று கதறினார். அவர் மரணத்தின் விளிம்பில் இருந்தபோது, சிந்திக்கும் செயல்பாடுகளை மூளை இயல்பாக இயக்குவதற்குத் தேவையான ஜீவ-சத்துவம் அவருக்கு கிட்டத்தட்ட இல்லாமல் போனதால், இயற்கை பிரமாணத்தையும் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் பூரணமாக நிறைவேற்றிய தாம், ஏன் தேவனால் கைவிடப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் மரணமடைபவர்களுக்கு பொதுவாக நடப்பது போல, மரணத்திற்குச் சற்று முன்பு, அவரிடம் கொஞ்சம் எஞ்சியிருந்த ஜீவசக்தி மீண்டும் மூளைக்குத் திரும்பிய போது, அவர் இந்த ஆழ்ந்த வேதனையிலிருந்து மீண்டார். இயேசுவினுடைய புதுசிருஷ்டி மிகக் கடுமை-யான வேதனையை கெத்செமனே தோட்டத்தில் அனுபவித்தது, மேலும் அவருடைய மனுஷீகம் மிகக் கடுமையான வேதனையை சிலுவையில் அவரது கடைசித் தருணங்களில் ஒன்றான ஒரு மனிதனாகத் தாம் தேவனால் கைவிடப்பட்டதை அவர் உணர்ந்தபோது அனுபவித்தது!

அவருடைய இறுதி ஜெபமான, **"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்** [இந்த கிரேக்கச் சொல்லுக்கு பாதுகாப்புக்காக நம்பி ஒப்படைத்தல் என்று பொருள்]" (லூக்கா 23:46) என்பது இரண்டு கருத்துக் களைக் கொண்டிருந்தது: **(1)** தமது புது சிருஷ்டிக்குரிய ஜீவனுக்கான உரிமையை, தாம் உயிர்த்தெழும் வேளை வரை, தேவன் பத்திரமாகப் பாதுகாத்து வைத்து மீண்டும் தமக்கு திரும்பக் கொடுக்கும் பொருட்டு அவரிடம் ஒப்புவித்தார்; மற்றும் **(2)** தமது மனுஷீக ஜீவனுக்கான உரிமையை, தாம் தெய்வீக சுபாவத்தில் உயிர்த்தெழுந்த பிறகு, அதை சுவிசேஷ-யுகத்தில் சபைக்கு சாட்டுதல் செய்வதற்கும், ஆயிரம் வருட யுகத்தில் உலகத்திற்கு உபயோகிப்பதற்கும் ஏதுவாக ஒப்புவித்தார். தேவன் இந்த இரண்டு ஒப்புவிப்புகளையும் அவற்றின் திட்டமிடப்பட்ட பயன்பாட்டிற்காகக் காத்துக்கொள்வார் என்ற முழு விசுவாச நிச்சயத்துடன் அவர் இந்த ஒப்படைப்பைச் செய்தார். நிச்சயமாக, இயேசுவின் ஜெப ஈடுபாடுகளைப் பற்றிய நமது ஆய்வு, அவர் தமது நெருக்கப் பாதையின் இந்த ஆறாவது படிநிலையைப் பூரணமாக மேற் கொண்டார் என்பதை நிரூபிக்கிறது.

துக்கம் நிறைந்த மனிதர்

ஆம், ஏசாயா அதிகாரம் 53:3-ல் இயேசுவைக் குறித்து இந்த வார்த்தைகளை எழுதியுள்ளார்: **"அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப் பட்டவரும்** [நிராகரிக்கப்பட்டவரும்], **துக்கம் நிறைந்தவரும்,**



பாடு அநுபவித்தவருமாயிருந்தார்: அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்: அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்: அவரை எண்ணாமற்போனோம்." [ASV] இயேசு அடைந்த இளைப்பு, துக்கம் மற்றும் கண்ணீர் விடுதல் போன்றவை பலவீனத்தினால் வந்த விளைவு என்று மனிதர்களால் அவ்வாறு கருதப்பட்டது, ஆனால் உண்மையில், அவர் தம்மைச் சுற்றியிருந்த துன்பங்களில் அனுதாபப்படுவதற்கும், தமது சொந்த இழப்பினால் அதை நிவர்த்தி செய்வதற்கும் ஏதுவாக இருந்த தம் மூளை அவயவங்களின் பூரணத்திலிருந்தே அவை வந்தன. ஒரு உயிரினம் எவ்வளவு பூரணமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிக அனுதாபம் கொண்டதாக இருக்கும்; அதன் தரம் எவ்வளவு மென்மையானதாக இருக்கிறதோ, அவ்வளவு எளிதில் அது வேதனைப்படும் மற்றும் ஆழமாகக் காயப்படும். நீங்கள் ஒருபோதும் கடுமையான வறுமையை அனுபவிக்காமல், உங்களைச் சுற்றிலும் வசதியாகவும், சுத்தமாகவும் இருக்கிறீர்கள் என்றால்-மனுக்குலத்தின் பெரும்பான்மையினர் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நீங்கள் பார்த்தால், அங்குள்ள ஏழ்மை, அழுக்கு மற்றும் அவலநிலையைக் கண்டு அத்தகைய சூழ்நிலையில் வாழ்வதை விட மரணமே மேலானது என்று உணருவீர்கள். இருப்பினும், அத்தகைய சூழ்நிலைகளுக்குப் பழகிப்போன ஆண்-களையும், பெண்களையும், குழந்தைகளையும் நீங்கள் அங்கு காண்பீர்கள், அங்கே அவர்களால் சிரிக்கவும், பாடவும், மகிழ்ச்சியாக இருக்கவும் முடிகிறது. இதற்குக் காரணம் அவர்களுடைய உணர்வுகளும் ரசனைகளும் உங்களை விடக் கடினமானவைகளாகயிருப்பதால், உங்களுக்கு அருவருப்பாகத் தோன்றும் பல காரியங் களை அவர்களால் கண்டு கொள்ளாமலிருக்க முடிகிறது.

பாவம், துன்பம், வியாதி மற்றும் மரணத்தில் வாழ்கின்ற மனிதர்களை ஒரு பூரண மனிதனாகிய இயேசு பார்த்தபோது, இந்த உலகம் அவருக்கு எப்படிக் காட்சியளித்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். அவருக்குத் துக்கங்கள் இருந்தது உண்மைதான்-ஆனால் அவை நமது துக்கங்களைத் தமது அனுதாபத் தினால் ஏற்றுக்கொண்டதால் உண்டானவை. அதன் மூலம் அவருடைய பூரண உணர்திறன்கள் ஆழமான

ஒத்துணர்வினால் தூண்டப்பட்டன. தம்மைச் சுற்றி தவித்து புலம்பிக் கொண்டும் செத்துக் கொண்டும் இருந்த அநேகருக்கு, அனுதாபத்தோடும் அன்போடும் தமது சொந்த ஜீவ சக்தியையே அவர் வழங்கினார். பூரணராக இருந்ததால், இயேசுவிடம் மிகுதியான அனுதாபம் இருந்தது; அதன் விளைவாக, தம்மிடம் வந்தவர்களை அவர் தொடர்ந்து குணமாக்கினார்-ஒவ்வொரு முறையும் அவர்களுடைய பலவீனத்தின் உணர்வினால் அவர் தொடப்பட்ட போதிலும், அவர்கள் அவருடைய பலத்தினால் புத்துணர்ச்சியும் புத்துயிரூட்டுதலையும் பெற்றார்கள்.

இயேசுவின் பல அற்புதங்களைப் பற்றிய வேதாகம விளக்கங்களில் பொதிந்துள்ள இந்த போதனையை மிகச் சிலரே கவனித்துள்ளதாகத் தெரிகிறது. அவற்றைப் பற்றிய சில நிகழ்வுகளைக் கீழே குறிப்பிடுகிறோம். பல வருடங்களாக நோய்ப்பட்டிருந்த பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தைத் தொட்டு குணமடைந்தாள். **"உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை** [ஆற்றல், ஜீவ சக்தி, பலம்] **புறப்பட்டதை தமக்குள் அறிந்து"** என்று மாற்கு 5:30 விவரிக்கிறது. லூக்கா 6:19 இவ்வாறு கூறுகிறது: **"அவரிடத்திலிருந்து வல்லமை** [பலம், ஜீவ சக்தி, ஆற்றல்] **புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்."** மத்தேயு 8:17 இதே சாட்சியத்தை அளிக்கிறது: இயேசு பிணியாளிகளைக் குணமாக்கியது நாம் கருத்தில் கொண்டிருக்கும் ஏசாயா தீர்க்கதரிசனத்தின் (53:12) நிறைவேறுதல் ஆகும், **"அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்."**

அப்படியிருக்க, அத்தகைய ஒரு மனிதர் துக்கங்கள் நிறைந்தவர் என்றும் பாடு அநுபவித்தருமாயிருந்தார் என்றும் அழைக்கப்பட்டதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? அந்த உன்னதமான முகத்திலும் சரீரத்திலும் துக்கங்களும் வேதனைகளும் தழும்புகளை ஏற்படுத்தியது என்றால், அது அவருடைய சொந்த பலவீனத்தினால் அல்ல; வேதனையும், வியாதியும், மரணமும் அவரைப் பிடித்துக்கொண்டதினாலும் அல்ல; மாறாக துக்கங்களும் வேதனைகளும் நமது இனத்தைப் பற்றிக்கொண்டிருந்தது என்பதையும்-அவர் அன்பும் அனுதாபமும் நிறைந்தவராய், மற்றவர்களின் பாரங்களை அவர் சுமந்தார் என்பதையும் நாம் ஒருபோதும் மறவாதிருப்போமாக. ஓ, அத்தகைய பரிபூரணமான மற்றும் எல்லையற்ற அன்பிலிருந்து நாம் எவ்வளவு தூரம் குறைவுள்ளவர்களாகக் காணப்படுகிறோம்! இத்தகைய ஒரு பூரண தரநிலையுடன் நம்மை நாமே அளந்து பார்க்கும்போது, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நம்முடைய இனம் எவ்வளவு பெரிய வீழ்ச்சியை அடைந்துள்ளது என்பதை நாம் உணர முடியும். ஒவ்வொருவரும் தன் அயலானைத் தன்னைப்போல நேசித்து, தேவையென்றால் ஒருவருக்கொருவர் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள மகிழ்ச்சியுடன் முன்வரும் அத்தகைய ஒரு நிலைக்கு மனுக்குலம் மீண்டும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்று நாம் வாஞ்சிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அப்பொழுது அது அவசியமாக இருக்காது-ஏனெனில் பாவமும் அதன் விளைவுகளும் முழுமையாக நீக்கப்படும்போது, அதன் தண்டனைகள் (வேதனை, வியாதி மற்றும் மரணம்) அனைத்தும் நீக்கப்பட்டுவிடும்.

அல்லேலூயா, எப்பேற்ப்பட்டதோர் இரட்சகர்! கிறிஸ்துவுக்குள் தேவனுடைய மன்னிக்கும் கிருபையை அனுபவித்த ஒவ்வொரு இருதயத்திலிருந்தும் இந்தத் துதி தேவனிடம் எழும்பட்டும்! ***

கிறிஸ்தவனுடைய சர்வாயுதவர்க்கம்

The Christian's Armor

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் தீராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." (எபேசியர் 6:13).

பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தையே செய்யும்பொருட்டு அதை கட்டாயம் நாடித்தேட வேண்டும்! பிரதிஷ்டை செய்த ஜனங்கள் ராஜ்யத்தில் தங்களுக்குரிய ஸ்தானத்திற்காகத் தங்களை ஆயத்தப்படுத்தி வருகிறார்கள்; கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைவதின் மூலம் பலப்படுத்தப்பட்ட இவர்கள், கர்த்தர் தங்கள் மீது வர அனுமதிக்கிற சோதனை எதுவாக இருந்தாலும், வீழ்ச்சியடைய மாட்டார்கள். (2 பேதுரு 1:5-11). நமது பாடத்தின் தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல், அந்த **"தீங்குநாளிலே"** சிலரால் நிலைநிற்க முடியும் என்று குறிப்பிடுகிறார், மற்றும் அந்த நாளில் அநேகரால் நிலைநிற்க முடியாது என்பதையும் இது உணர்த்துகிறது.அந்த நாளிலே நிலைநிற்க விரும்புவோர், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் முத்திரையைத் தாங்கியுள்ள ஒவ்வொரு பகுதியையும் கொண்டிருக்கும் **"தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை"**

கிறிஸ்தவனின் சர்வாயுதவர்க்கம்



இரட்சணியமென்னும் தலைச்சீரா,
நீதியென்னும் மார்க்கவசம்,
சத்தியம் என்னும் கச்சை,
விசுவாசமென்னும் கேடகம்,
ஆவியின் பட்டயம்.

சத்தியம் அளிக்கும் கடின அனுபவங்களைப் பொறுமையோடு சகிப்பதற்கான ஆயத்தம் என்னும் பாதரட்சையை உங்கள் கால்களில் தொடுத்தவர்களாயும் நில்லுங்கள்.

தரித்துக்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவிக்கிறார். உண்மையாக பிரதிஷ்டை செய்த அனைவருக்கும் தேவையான முழுமையான மற்றும் நிறைவான சர்வாயுத வர்க்கத்தை தேவன் தமது வார்த்தையில் வழங்கி-யுள்ளார். இங்கு பதின்மூன்றாம் நூற்றாண்டின் குதிரையில் நீண்ட ஈட்டியுடன் போர் புரியும் வீரர்களுடைய உலோகக் கவசங்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை, மாறாக, கிறிஸ்தவர்களுக்கு இன்றியமையாத சர்வாயுத-வர்க்கத்தின் பல்வேறு பாகங்களாகிய விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதல் போன்ற குணாம்ச கிருபைகளே இங்கு குறிப்பிடப்படுகின்றன; அத்தகைய சர்வாயுத-வர்க்கத்தைத் தரித்தவர்கள் மட்டுமே அந்த நாளின் தாக்குதல்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பார்கள் என்று அவர் குறிப்பிடுகிறார்.

நாம் தேர்ந்தெடுத்துள்ள பாடத்தின் தலைப்பு வாக்கியத்தை ஆழமாகச் சிந்திப்போம்: "ஆகையால்" என்ற வார்த்தை, சிலுவையின் நல்ல போர்வீரர்களாக, நாம் வெற்றி பெறுவதற்காக இதைச் செய்ய வேண்டும் என்பதை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறது. கர்த்தருடைய ஜனங்கள் தேவனுடைய முழு சர்வாயுத-வர்க்கத்தையும் மிகுந்த கவனத்துடன் தரித்துக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வசனத்தில் வலியுறுத்துகிறார். நம்முடைய சேனைத் தலைவரிடம் ராஜவிசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தும் வகையில், இந்த சர்வாயுதவர்க்கத்தை அணிந்துகொள்வதற்கு நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். சத்துருக்களிடமிருந்து பாதுகாக்கும் இந்த சர்வாயுதவர்க்கம் அவருடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து தெய்வீகமாக வழங்கப்படுகிறது. இந்த முழுமையான சர்வாயுதவர்க்கம் இல்லாமல் தேவனுடைய பிள்ளை எவரும் இந்தத் தீங்குநாளிலே பாதுகாப்பாக இருக்க முடியாது. "**கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக**" (மத்தேயு 24:24) இருக்கும் அந்த மிகவும் பலமான வஞ்சனை-களைச் சமாளிக்க தேவனுடைய ஜனங்களுக்கு இந்த சர்வாயுதவர்க்கம் விசேஷமாகத் தேவைப்படும்.

கர்த்தருடைய விசுவாச உண்மைத்துவமுள்ள ஜனங்கள், தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் நம்பிக்கைக் கொண்டிருப்பதை உள்ளடக்கிய தெய்வீக உதவி இல்லாமல், சாத்தானின் வஞ்சகமான மற்றும் தீய தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாது. இந்தப் போர் மிகவும் உக்கிரமானதாக இருக்குமென்பதால், "**உண்மை-யான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமா-யிருக்கவேண்டும்**" (தீத்து 1:9) என்பதற்கேற்ப பற்றிக் கொள்ளாதிருக்கிற யாவரும் இந்தப் போரில் குறைவுபட்டு தவறிப்போவார்கள். சோதனைகளின் தீவிரத்தைத் தாங்க முடியாதவர்கள், வெளிச்சத்தை விட்டுப் பின்வாங்கு-வார்கள், இதன் மூலம் தேவன் அந்த நபரை நிகழ்கால சத்திய வெளிச்சத்திற்குப் பாத்திரவானாகக் காணவில்லை என்பது வெளியரங்கமாகும்.

இந்த "தீங்குநாளில்" கிறிஸ்தவனுடைய தேவை

நாம் பகுத்தாராய்ந்து பார்க்கும்போது, நமது பரிசுத்தமாக்கப்படுதலே (sanctification) நமக்கு முதன்மையான விஷயமாக இருப்பதை நாம் காண்-கிறோம். "**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டு-மென்பதே தேவனுடைய** [இந்த நாள் வரையுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களைக் குறித்த] **சித்தமாயிருக்-கிறது.**" (1 தெசலோனிக்கேயர் 4:3). "தேவனுடைய சித்தம்" என்பது உண்மையாகப் பிரதிஷ்டை செய்தவர்-களைக் குறித்த அவருடைய திட்டமாகும். இந்த வேலை நம்மில் அதன் பூரணமான நிறைவை அடையும் வரை தொடர வேண்டும் என்பது அவருடைய சித்தமாக இருக்கிறது. "பரிசுத்தமாக்கப்படுதல்" என்பது பரிசுத்த ஆவியின் மூலம் நமக்குத் தெளிவாக்கப்படுகிற சத்தியத்தின் மூலம் உலகத்திலிருந்து நம்மை முற்றிலும் பிரித்தெடுப்பதாகும். தேவனுடைய சித்தம் நமது சித்தமாக இருக்குமானால், நமக்கென்று தெளிவாகக் குறிக்கப்பட்ட ஒரு பாதையைக் கொண்டிருப்போம். (சங்கீதம் 119:105). தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நமது பரிசுத்தமாக்கப்படுதல், நாம் "அழைக்கப்பட்டபோதோ" அல்லது நாம் "பாவத்திலிருந்து விலகத்" தொடங்கும் போதோ ஆரம்பமாவதில்லை; மாறாக நாம் "முழு பிரதிஷ்டை" என்ற நிலையை அடையும் போதுதான் அது தொடங்குகிறது. சத்தியத்தை அதன் மீதான அன்புடன் ஏற்றுக்கொள்பவர்கள், சத்திய வசனத்தின் மாணாக்கர்-களாகும் சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் படிக்கும்போது, மெய்யான சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் எவ்வாறு சத்தியத்தினால் பரிசுத்த-மாக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி மென்மேலும் கற்றுக்கொள்கிறார்கள்: "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்.**" (யோவான் 17:17).

எதிர்பார்க்கப்படும் பரிசுத்தவான்களாக, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் மிகுந்த ஜாக்கிரதை-யுள்ளவர்களாய், தங்கள் விசுவாசத்தோடே தைரியத்தை-யும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறு-மையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டிக்கொள்ளுகிறார்கள். 2 பேதுரு 1:8 இதற்கான காரணத்தை விளக்குகிறது: **"இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது.**" பின்னர், தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கப் படுகிறது: **"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பை-யும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்-கிரதையாயிருங்கள்: இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரி-பூரணமாய் அளிக்கப்படும்.**" - 2 பேதுரு 1:10,11.

விசேஷமாகத்தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு வகுப்பார்-கள் இருப்பதாகச் சரியாகக் கூறப்படுகின்ற அதே வேளையில், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரர்களும் தெரிந்தெடுப்பின் இரட்சிப்பின் அம்சங்களின் கீழ் அழைக்கப்படுகிறார்கள் என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஏசாயா 49:11-ல் இவ்வாறு வாசிக்கிறோம்: **"என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்: என் பாதைகள் உயர்த்தப்படும்.**" PT 1977, பக்கம். 38-லிருந்து நாம் வாசிக்கிறதாவது: வசனம் 10-ல் குறிப்பிடப்பட்டுள்ள திரும்பக்கொடுத்தலைப் பெறும் வகுப்பினருக்கும், திரள் கூட்டம் மற்றும் திரும்பக்கொடுத்தல் காலத்திற்கு முந்தைய இதர பிரதிஷ்டை செய்த வகுப்பினருக்கும் இடையேயான கூடுதல் தெளிவான வேறுபாடு இங்கே கொடுக்கப் பட்டுள்ளது. திரும்பக்கொடுத்தல் காலத்திற்கு முந்தைய ஐந்து பிரதிஷ்டை செய்த வகுப்பினரையும்-சீயோன், மோரியா, ஆக்ரா, பெசிதா மற்றும் ஓஃபேல் மலைகளால் முறையே அடையாளப்படுத்தப்படும் சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள்கூட்டம், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் - ஆகிய இவர்களைத் தெரிந்து கொள்ளப்படாத ஜனங்கள் பரிசுத்தப் பெரும்பாதையில் முன்னேறிச் செல்வதற்கு உதவி செய்யும் விசேஷித்த கருவிகளாக தேவன் மாற்றுவார் (சங்கீதம் 72:3-ஐ ஒப்பிடுக). **"பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.**" இந்த நோக்கத்திற்காக தேவன் திரும்பக்கொடுத்தல் காலத்திற்கு முந்தைய இந்த ஐந்து வகுப்பினரை உயர்த்துவார். [பிற குறிப்புகள்: PT 2014, பக்கம் 57; BS 2016, பக்கம் 58].

அக். 27, 1968-ல் நடந்த சகோதரர் ஜாலியுடனான கேள்வி பதில் கூட்டம்: இப்போது உதாரணமாக, 2 பேதுரு 1:4 வசனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மகா மேன்மை-யும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவை-களினாலே "நமக்கு" அளிக்கப்பட்டிருக்கிறது: இவை-களினால் திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்-களாகலாம்; இப்போது, இந்த வசனத்தை நீங்கள் எப்படி வாசிக்கப் போகிறீர்கள்? சிறுமந்தையைச் சேராத நீங்கள், நம் அனைவரையும் சேர்த்து, நமக்கான ஆசீர்வாதங் களைப் பெற இந்த வசனத்தை எவ்வாறு பயன் படுத்துவது? நல்லது, "நமக்கும் கூட" மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் உள்ளன என்றும், இவைகளினால் நாம் பரலோக மகிமை அல்லது பூலோக மகிமை ஆகிய ஏதோ ஒன்றில் பூரண ஜீவனில் நாம் பங்கடைவோம் என்றும் கூறுவோம். நாம் திரள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், பரலோக மகிமை என்றும்; நாம் ஆவியினால் ஜெனிப்பிக்கப்-"படாத" வர்களாக இருந்தால், பூலோக மகிமை என்றும் கூறுவோம். ஓ, ஆம், நமக்கும் மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் உள்ளன; இவை-களினால் நாம் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களாகி, பூமிக்குரிய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம். நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ள வேண்டும்-இது "நம்மில்" ஒவ்வொருவருக்கும் பொருந்தும், எனவே நான் இந்த வசனத்தை இவ்வாறு பொருத்தமாக்கிக் கொள்ளுவேன்.உலகத்துடன் ஒப்பிடும்-போது நாம் மிகச் சிலராகவே இருக்கிறோம், ஆம், ஒரு சிறு மந்தையே.

பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும் பொருட்டு அதை அறிய முயற்சிப்பதன் மூலம், விசுவாச உண்மைத்துவ-முடையவர்களுக்கான மகிமையின் சுதந்தரத்திற்காகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கிறார்கள். குணாம்ச வளர்ச்சியினால் பலப்படுத்தப்பட்ட இவர்கள், கர்த்தர் அவர்கள் மீது வரும்படி அனுமதிக்கிற சோதனை எதுவாக இருந்தாலும் வீழ்ச்சியடையமாட்டார்கள். அப்போஸ்-தலனாகிய பவுல், எபேசு சபைக்கு எழுதிய தமது நிருபத்தில், அந்த "தீங்குநாளிலே" சிலரால் நிலைநிற்க முடியும் என்று குறிப்பிடுகிறார், மேலும் இது அந்த நாளில் மிக அநேகரால் நிலைநிற்க முடியாது என்பதையும் உணர்த்துகிறது. அந்த நாளில் நிலைநிற்க விரும்புவோர், **"தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தை"** தரித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் அறிவிக்கிறார். கிறிஸ்தவர்களுக்கு சர்வாயுதவர்க்கத்தின் பல்வேறு

பாகங்களும் இன்றியமையாததாக இருப்பதால், அவ்வாறு முழுமையான சர்வாயுதவர்க்கம் தரித்தவர்கள் மாத்திரமே அந்த நாளின் தாக்குதல்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்பார்கள் என்றும் அவர் உணர்த்துகிறார்.

"தீங்குநாள்" எப்போது வரும் என்பதை கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அது எதிர்காலத்தில் வரும் என்பது அவர்களுக்குத் தெரியும், ஆனால் எதிர்காலத்தில் எவ்வளவு காலத்திற்குப் பிறகு என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் தங்கள் மரணத்திற்கு முன் அதை எதிர்பார்க்கவில்லை; ஏனெனில் அவர்களில் சிலர் தற்போதைய சரீரத்தை விட்டுவிட்டு, மரித்து, முதலாம் உயிர்த்தெழுதலில் விழித்தெழுவோம் என்றும், கிறிஸ்துவின் இரண்டாவது வருகை இன்னும் சிறிது காலம் தள்ளியிருக்கும் என்றும் நம்புவதாகக் கூறினார்கள். கர்த்தருடைய நாளையும், வேளையையும், குறித்த காலம் வரும் வரை தமது ஜனங்களுக்குத் தெரிவிக்காமல் வைத்திருப்பது தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பது தெளிவாகிறது (மாற்கு 13:32; 1 தெசலோனிக்கேயர் 5:1-5); ஆனால் "அந்த தீங்குநாள்" வரும்போது, அவர்கள் நிலை நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிக்கு கிறிஸ்தவனின் சர்வாயுதவர்க்கத்தை ஜாக்கிரதையுடன் தரித்துக்கொண்டு அதைத் தொடர்ந்து அணிந்து கொண்டிருக்கும் ஏற்பாட்டை அவர் செய்திருந்தார்.

நாம் இந்த "தீங்கு நாளுக்குள்" வந்துவிட்டோம் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன; எனவே, நமக்குரிய அவசரச் செய்தி இதுவே: **"தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்!"** -வரவிருக்கும் மாபெரும் சோதனையில் நீங்கள் நிலைநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, உங்களை ஆயத்தம் செய்யுங்கள், ஆயத்தமாகுங்கள்! சர்வாயுதவர்க்கத்தின் ஒவ்வொரு பகுதியும், ஆவியின் ஒவ்வொரு கனியும், தற்போது நிலவுகிற இந்த "தீங்குநாளுக்கு"-இந்த "சோதனை காலத்திற்கு"- ஆயத்தப்படுவதற்குத் தேவையான ஒரு பகுதியாகும். (பார்க்கவும்: 1 கொரிந்தியர் 3:13; 4:5; எபேசியர் 6:13-18; 2 பேதுரு 1:4-11; கலாத்தியர் 5:19-26).

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரே மெய்யான சபையை, "பிற்காலங்களிலே" அல்லது "கடைசி நாட்களில்," அநேகர் "விசுவாசத்தை விட்டு விலகிப் போகும்" "கொடிய காலங்கள்" வரும் என்று முன்னெச்சரித்தார். (1 தீமோத்தேயு 4:1, 2; 2 தீமோத்தேயு 3:1-7). நாம் வாழும் இந்த காலங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு விசித்திரமான ஆபத்தானவை; ஏனெனில் சத்தியத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த அநேக நுட்பமான மற்றும் வஞ்சகமான தப்பறைகள் இப்போது முளைத்து வருகின்றன. இந்த "கொடிய காலங்களின்" நெருக்கடியைச் சமாளிக்கத் தேவையான தேவனுடைய ஏற்பாடு

எச்சரிப்பு

"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்."

1 தீமோத்தேயு 4:1

அவருடைய ஜனங்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. இந்த "தீங்குநாளுக்கு" தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கம் முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது மிகவும் தேவையாக உள்ளது. கர்த்தர் இந்தச் சர்வாயுதவர்க்கத்தின் ஒவ்வொரு பகுதியையும் நமக்கு ஒவ்வொன்றாக வழங்குகிறார், அதனால் நாம் அதை அணிந்து கொண்டு அதற்குப் பழகிக்கொள்ளவும், அதில் வசதியாகவும் இயல்பாகவும் உணரவும் வேண்டுமென்று கூறுகிறார். ஏனெனில், இது இல்லாமல் இந்த "தீங்குநாளில்" எவராலும் நிலைத்துநிற்க முடியாது.

நாம் எதிர்பார்த்ததுபோல், ஆயிரம் வருட யுகத்திற்குமுந்தைய ஆபிரகாமின் கடைசி வித்தான சகோதரர்களுக்கு ஏற்றகால சத்தியத்தைக் கொண்டு செல்லும் ஊழியத்திற்காகப் பரீட்சிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, தகுதியானவர்களாக நிரூபிக்கப்படுகிறவர்களை, அடுத்த பூமிக்குரிய வகுப்பினராக [பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள்]- மாற்றுகின்ற காலத்தை கர்த்தர் முன்னெடுத்துச் செல்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். நீதிமொழிகள் 4:18-க்கு இணக்கமாக, இந்த மிக முக்கியமான வகுப்பினருக்கு, எப்போதும் போல ஏற்றகால சத்தியம் தேவை என்பதை நாம் காண்கிறோம்.

தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தவர்களும் மற்றும் பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்தவான்களில் சிலர், இந்தத் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களில் சிலரோடு ஐக்கியம் கொண்டு படித்ததை நாங்கள் அடையாளங் கண்டு மதித்துணருகிறோம் என்று தாராளமாய் கூற முடியும்! எரேமியா 15:16 பரிசுத்தவான்களை இவ்வாறு ஊக்குவிக்கிறது, **"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.**" தேவனுடைய வார்த்தைகள், பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளைப் பரிசுத்தமாக்குவதற்காக

வடிவமைக்கப்பட்ட சத்தியங்கள் ஆகும். நமது அன்றாட ஜீவியத்தில் அவருடைய பரிசுத்த ஆவி வெளிப்பட வேண்டுமானால், நாம் தேவனுடைய வார்த்தைகளை ஜாக்கிரதையுடன் உட்கொள்ள வேண்டும். மத்தேயு 4:4 உறுதியாகக் கூறுகிறது: **"மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்."**

சில சகோதரர்கள் இந்த ஆலோசனைக்குச் செவி-சாய்த்து வருகிறார்கள். அவர்கள் சர்வாயுதவர்க்கத்தின் ஒவ்வொரு பகுதியையும் பெற்றுக் கொண்டவுடனே வேகமாக கவனத்துடன் அணிந்து கொண்டார்கள், அதன் பலனாக, இன்று அவர்கள் வேத வசனத்தின் சத்தியத்தினாலும், அதன் ஆவியினாலும் முழுமையாகத் தரிக்கப்பட்டு நிற்கிறார்கள். இதினால் அவர்களின் அரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (அவருடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் அவர்கள் தேவனுக்கு ஊழியம் செய்கிறார்கள்); இது அவர்களின் கால்களில் பாதரட்சையாகத் தரிக்கப்பட்டுள்ளது (அவர்களின் நடத்தை நேர்மையாக இருக்கிறது); மேலும் இது இரட்சணியமென்னும் தலைச்சீராவாக (தப்பறையின் கண்ணிகளிலிருந்தும், வஞ்சனைகளிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கிறது) அவர்களின் தலையை (அவர்களின் மனம், ஒழுக்கநெறி, மதம் சார்ந்த திறன்கள்) மறைத்து பாதுகாக்கிறது. மேலும் அவர்கள் நீதியென்னும் மார்க்கவசத்தையும் தரித்திருக்கிறார்கள்-அது சத்தியம் அவர்களுக்குள் வளர்த்தெடுத்த கிறிஸ்துவின் நீதியும், நீதியுள்ள குணாம்சமும் ஆகும்; அவர்கள் தங்கள் கரங்களில் ஆவியின் பட்டயத்தை ஏந்தியிருக்கிறார்கள், இது தேவ ஏவுதலால் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை ஆகும், இதை அவர்கள் இப்போது கிறிஸ்துவின் கோட்பாட்டு உபதேசங்களைப் பாதுகாப்பதில் லாவகமாகவும் வலிமையாகவும் கையாளத் திறமையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதே வேளையில் அவர்களின் விசுவாச-மென்னும் கேடகமானது எதிரியின் அக்கினியாஸ்திரங்கள் அனைத்திற்கும் எதிரான ஒரு சிறந்த பாதுகாப்பாக இருக்கிறது; அதனால் பறந்து வரும் அம்புகள் சர்வாயுதவர்க்கத்தை அதிரச் செய்யவோ அல்லது "உள்ளான மனுஷனை" நிலைதடுமாறச் செய்யவோ முடியாது. (எபேசியர் 3:16).

இத்தகைய சர்வாயுதவர்க்கத்திற்காகத் தேவனைத் துதியுங்கள்! நீங்கள் அதைத் தரித்துக்கொண்டீர்களா? உங்கள் பிதாக்கள் வைத்திருந்த அதே சர்வாயுத-வர்க்கத்தைக் கொண்டே அவர்கள் செய்ததைப் போலவே நீங்களும் சமாளித்துவிடலாம் என்ற எண்ணத்தில் திருப்தியடைந்துவிடாதீர்கள். இன்றைய காலத்திற்கு தேவைப்படும் விதத்தில் நீங்கள் அதைத் தரித்திருக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது, இல்லையெனில் நீங்கள்



நிச்சயமாக விழுந்துபோவீர்கள். கடந்த கால பரிசுத்தவான்களுக்கு வழங்கப்பட்ட சர்வாயுதவர்க்கம் அவர்களின் காலத்திற்கும், சோதனைக்கும் போதுமானதாக இருந்தது; ஆனால் இந்த "தீங்குநாளில்" அதிகரித்துள்ள தப்பறைகளும், விசுவாச சோதனைகளும் இன்னும் முழுமையான பாதுகாப்பை அவசியமாக்குகின்றன.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்று கிறிஸ்தவ விசுவாசம் சோதிக்கப்பட்டு வருகிறது. சாத்தானும் அவனுடைய பிரதிநிதிகளும் தேவனுடைய வசனத்திற்கு முரணான பன்மடங்கு அதிகமான நம்பிக்கைகளை முன்னெப்போதும் இல்லாத அளவில் இன்று உருவாக்கியுள்ளனர். அநேகர் **"இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அங்கீகரியாமற்போனபடியால்,"** **"பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத்"** தேவன் அவர்களுக்கு அனுமதித்து அனுப்பினார். (2 தெசலோனிக்கேயர் 2:10,11). பரிணாமக் கொள்கை, உயர்தர வேதாகம கண்டனம், நவீனத்துவம், தியோசோபில், இஸ்லாம், புது யுகம், பல தெய்வ வழிபாடு, ஆவியுலகத் தொடர்பு, கிறிஸ்தவ விஞ்ஞானம், மார்மோன் வழிபாடு போன்ற பல்வேறு நவீன கால வஞ்சகங்களில் பல்லாயிரக் கணக்கானோர் விழுந்துள்ளனர்; மேலும் கிறிஸ்துவ மண்டலத்தின் ஆயிரக்கணக்கான பிரசங்க மேடைகள் தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைத் தவிர தெய்வீக நம்பிக்கை மறுதலிப்பையும் மற்ற எல்லாவற்றையும் பிரசங்கித்து வருகின்றன.

தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொண்டு, உலகம், மாம்சம் மற்றும் பிசாசின் தாக்குதல்-களுக்கு எதிராகத் தங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்கத் தயாராகவும், சரியான முறையில் ஆயத்தத்துடன் நிற்பதற்குப் பதிலாக, அநேகர் சர்வாயுதவர்க்கத்தின் பெரும்பகுதியை ஒவ்வொன்றாகக் கழற்றி வைத்துவிட்டு

தூங்கிவிட்டார்கள். எனவே சிலர் எதிர்பாராத விதமாகப் பிடிபடுகிறார்கள். **"சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந் திருப்பாய்? இன்னுங் கொஞ்சம் தூங்கட்டும், இன்னுங் கொஞ்சம் உறங்கட்டும், இன்னுங் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந்த– வனைப்போலவும் வரும்."** (நீதிமொழிகள் 6:9-11; 24:30-34 NKJV).

ஆனால் விசுவாச உண்மைத்துவமுள்ள சிலுவைப் போர்வீரர்களாகிய நாம், சர்வாயுதவர்க்கத்தை நேர்த்தி-யாக தரித்து, விழிப்புடனும் எல்லா நேரங்களிலும் எச்சரிக்கையுடனும் இருக்கிறோம். 1 தெசலோனிக்கேயர் 5:5-6, **"நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்: நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்."** வசனம் 8, **"பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்– களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்– தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்." "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்– களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்– களாயும்: சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்– களாயும்: பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங் களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற் றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை யும் எடுத்துக்கொள்ளுங்கள்."** (எபேசியர் 6:14-17 NKJV). இந்தத் தீங்குநாளில் நாம் எதிர்த்து நிற்பதற்கும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கத் திராணி யுள்ளவர்களாவதற்கு உரிய ஒரே வழி இதுவே.

ஆம், பகலுக்குரியவர்களாகிய நாம், யேகோவா தேவன் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரர்களின் கரங்களில் ஒப்படைத்துள்ள முக்கியமான ஊழியத்தைப் பற்றிப் பேசுவோம். சங்கீதம் 25:14, **"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்த** [பயபக்தியுள்ள]**வர்களிடத்தில்** [பலியினாலே கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியவர்களிடம்] **இருக்கிறது: அவர்– களுக்குத்** [நிகழ்கால பரிசுத்தவான்களுக்கு, இல்லை-யெனில் இதைப் புரிந்துகொள்ள முடியாது] தம்முடைய உடன்படிக்கையை [ஆபிரகாமிய உடன்படிக்கையை] **தெரியப்படுத்துவார்."** அவர்கள் இன்னும் தற்காலிக நீதிமானாக்கப்படுதல் நிலைக்கு வர வேண்டியுள்ளது, மேலும் பாளயத்தில் தொடர்ந்து பிரதிஷ்டை செய்கிறவர்-களுக்கு அவருடைய பரிசுத்த ஆவியினால் கர்த்தருடைய இரகசியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. சங்கீதம் 25:14 பழைய ஏற்பாட்டு காலத்திற்குப் பொருந்தியது; அது இப்பொழுதும் பொருந்துகிறது, எல்லா காலங்களிலும் பொருந்தும்!

அக்டோபர் 27, 1968-ன் ஒரு கேள்வியிலிருந்து: ஆகையால், கர்த்தருடைய இரகசியம் பாளயத்தில் நீதிமானாக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்பவர்களுக்கானது; அவர்கள் தேவனிடத்தில் பயபக்தியுடனிருப்பதால், கர்த்தருடைய இரகசியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள், கர்த்தருடைய இரகசியங்கள் அவர்களிடத்தில் உள்ளன, அவர் அவர்களுக்குத் தமது உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்; சரி, ஆனால் பாளயத்தில் வெண்கலத் தொட்டி இல்லையே, அப்படியானால் தேவனுடைய வார்த்தை எங்கே அடையாளப்படுத்தப் படுகிறது? ஓ, அது திரையிலே அடையாளப்படுத்தப் படுகிறது; எனவே ஜாண்சன் போதகர், நாம் பாளயத்தைக் கட்டி எழுப்பும் போது கிறிஸ்துவை இரட்சகராகவும் ராஜாவாகவும் காட்டும் அந்தத் திரையை உயர்த்திப்பிடிக்க வேண்டும் என்று நமக்குத் தெரிவித்து வலியுறுத்தினார். ஓ, ஆனால் நீங்கள் சொல்லலாம், அது முழு வேதாகம-மும் அல்லவே என்று; நல்லது, அது நிச்சயமாக அதுதான், அது நிச்சயமாக அதுதான்! இயேசு வேத-பாரகரிடமும் பரிசேயரிடமும் **"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், என்னைக்குறித்துச் சாட்சிகொடுக் கிறவைகளும் அவைகளே"** என்று கூறவில்லையா, அவர் கிறிஸ்து, இல்லையா?

ஆயிரக்கணக்கானோர் விழுந்து போவது ஏன்?

முழு உலகத்தின் மீதும் வரும் என்று முன்ன-றிவிக்கப்பட்ட அந்தச் சோதனைகாலம் இப்போது நம்மீது வந்துவிட்டது, அது தேவனுடைய ஒரே மெய்யான சபையிலிருந்தே தொடங்க வேண்டும் என்று அப்போஸ் தலனாகிய பேதுரு அறிவிக்கிறார். **"உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது."** (சங்கீதம் 91:7). ஆயிரம் பேர் விழுவார்கள் ஒருவன் நிலைத்து நிற்பான் என்பதே தீர்க்கதரிசியின் கூற்றாகும். இதே காலத்தையும் சோதனையையும் குறித்த அப்போஸ்தலன் கூற்றானது எபேசியர் 6:13-ல் உள்ள நமது ஆதார வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் விழுந்து போவது ஏன்? ஏனெனில், அவர்கள் அவசியமான குணாம்சத்தின் வளர்ச்சியை அலட்சியம் செய்தார்கள்; தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தையும் அவர்கள் தரித்துக்கொள்ளத் தவறிவிட்டார்கள்; எதிராளியின்

வஞ்சனைகளினாலும், உலகம் மற்றும் பாபிலோனின் ஆவியினாலும் அவர்கள் மனதளவில் திசைதிருப்பப்பட்டார்கள். அவர்கள் புறஜாதிகளுக்காகவோ அல்லது அழகான பெரிய ஆலய கட்டிடங்களைக் கட்டுவதற்காகவோ பணம் திரட்ட முயன்றார்கள்; அவர்கள் ஆலய கண்காட்சிகள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், முதலியவைகளையும் நடத்தினார்கள்; ஆனால் தங்கள் சொந்த குணாம்சத்தைக் கட்டியெழுப்புவது அவசியம் என்ற உண்மையை அவர்கள் மதித்துணரவில்லை. தேவனுடைய வார்த்தையின் போதனையின் படி கட்டியெழுப்பப்பட்ட அந்த குணாம்சம், கிறிஸ்துவின் ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு முற்றிலும் அவசியமானது. எனவேதான், இவர்கள் நம்மைச் சுற்றிலும் விழுந்து கொண்டிருக்கிறார்கள்.



அப்போஸ்தலனுடைய காலத்தில் தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததோ, அது இன்றைய தினத்திலும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. நீதி என்னும் மார்க்கவசம், விசுவாசம் என்னும் கேடகம், அறிவுத் திறனைப் பாதுகாக்கும் கவசமான இரட்சணியமென்னும் தலைச்சீரா, சுவிசேஷத்திற்குரிய ஆயத்தமென்னும் பாதரட்சை, தேவவசனமாகிய ஆவியின் பட்டயம் ஆகியவற்றில் குறித்துக் காட்டப்படுகிற அனைத்தும் நமக்குத் தேவையாக இருக்கின்றன. நமது இடுப்புப் பகுதி/அரைகள் சத்தியத்தினால் கட்டப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறாக, கர்த்தருடனும் அவருடைய வீட்டாருடனும் நமக்குள்ள உயிர்த்துடிப்புள்ள உறவைப் பாதுகாக்கவும், நாளுக்கு நாள் கிருபையிலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளருவதையும் நமக்கு சாத்தியமாக்குகிறது.

"கடைசி நாட்களில்," "**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் படுவார்கள்**" என்று அப்போஸ்தலன் கூறினார். எனவே, நாம் விசுவாசத்தில் முழுமையாக ஸ்திரப்பட்டவர்களாகவும், கர்த்தரை முற்றிலும் நம்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும். மற்றவர்களைப் பாதுகாப்பதற்கும், நம்மை தற்காத்துக் கொள்வதற்குமான ஊழியத்திற்கு நாம் ஆயத்தமாக இருக்கும்படி, ஆவியின் பட்டயத்தைக் கூர்மையாகவும், கரத்தில் ஆயத்தமாகவும் வைத்திருப்போமாக. நாம் ஒரு வெற்றிகரமான போரை நடத்தவும், நமது ஓட்டத்தின் முடிவு வரை விசுவாச உண்மைத்துவத்துடன் இருப்பதை நிரூபிக்கவும், நமது சொந்த மாம்ச பலவீனங்கள் மற்றும் நம்மைச் சூழ்ந்துள்ள ஆபத்துகள் குறித்து நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும், அதன் மூலம் நம்முடைய கர்த்தருடன் அவருடைய ராஜ்யத்தில் நாம் பங்கடைவோம்.

"**பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து, எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய** (நமது மிகச்சிறந்த ராஜதந்திரிகளுடைய இருதயங்கள் உட்பட) **இருதயம் சோர்ந்துபோகும்**" (லூக்கா 21:26) என்கிற நிலையில் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காத, மிகுந்த குழப்பத்திலுள்ள ஜனங்களால் நாம் சூழப்பட்டிருந்தாலும், "**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்திற்கு**" செவிசாய்க்கின்ற தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நமது பாக்கியம் எவ்வளவு பெரியது! நிச்சயமாக, இது "**இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போல்**" இருக்கிறது; ஏனெனில், "**இதோ இருள்** [அறியாமை] **பூமியையும்** [பொதுவான ஜன சமுதாயத்தையும்], **காரிருள் ஜனங்களையும் மூடும்: ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்** [விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் சத்தியத்தின் வெளிச்சத்தை அனுபவிக்கிறார்கள்-சங்கீதம் 97:11], **அவருடைய மகிமை** [அவருடைய குணாம்சத்தின் பரிபூரணம்] **உன்மேல் காணப்படும்**" (ஏசாயா 60:2) என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது.

"பொழுது விடியும் வரை" அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனத்தைக் கவனித்திருக்கும்படி கர்த்தருடைய ஜனங்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். "**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரை அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.**" (நீதிமொழிகள் 4:18). மனுக்குலத்தின் நியாயத்தீர்ப்பு மற்றும் ஆசீர்வாதத்தின் ஆயிரம்வருட நாளான அந்தப் பூரண நாளின் (2 பேதுரு 3:7,8), விடியற்காலத்தில் நாம் இருக்கின்றபோதிலும், அது இன்னும் முழுமையாக உதிக்கவில்லை. தேவனுடைய கிருபையினால் "நாமெல்லாரும் "**வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறோம். நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே**" என்பதினால் நாம் சந்தோஷப்படுகிறோம்.(1 தெசலோனிக்கேயர் 5:5). "**இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள** [அறிவிலுள்ள] **தமது மகிமையின்** [அவருடைய மகிமையான குணாம்சத்தின்] **அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக,** [தமது வார்த்தையின் மூலமாக] எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்." (2 கொரிந்தியர் 4:6).

அவர்களை விட்டு விலகுங்கள்

இறுதி குறிப்புகள்: கல்லாதவர்களும், மனப்பூர்வமாக அறியாமையில் இருப்பவர்களும், எந்தவொரு கடிந்து கொள்ளுதலுக்கும் அல்லது எச்சரிப்பின் வார்த்தைகளுக்கும் எதிராகத் தீவிரமாகப் போராடுவார்கள் என்றும், தாங்கள் வெளிப்புற இருளுக்குள் செல்வதற்குப் பதிலாகப் புதிய வெளிச்சத்தைப் பின்பற்றுவதாகவும் உரிமை கொண்டாடுவார்கள் என்பதை மட்டுமே நாம் எதிர்பார்க்க முடியும். தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளை, அவர்களின் தவறான நம்பிக்கைகளை வெளிப்படுத்தி, அவர்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு ஒருங்கிணைந்த முயற்சி செய்யும்போது, அவர்கள் உங்களை வெறுப்பார்கள் மற்றும் உங்களுக்கு எதிராகப் பலவிதமான தீமையானவைகளைக் கூறுவார்கள். இதைக் குறித்து நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை; இறுதி வரை நடைபெற வேண்டிய கொழித்தல் செயல்பாட்டில் இது உடன் நிகழ்வான ஒரு பகுதி மட்டுமே. "**இடறல்கள்** [பிரிவினைகள்] **வருவது அவசியம்: ஆனாலும் எந்த மனுஷனால்** [மனமார, துணிகர] **இடறல்** [வஞ்சித்தல்] **வருகிறதோ, அவனுக்கு ஐயோ**" (மத்தேயு 18:7) என்ற எஜமானரின் வார்த்தைகளையும், "அன்றியும் **சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும்** [ஒழுங்கற்ற நடத்தை] **உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டு மென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்**" என்ற அப்போஸ்தலரின் ஆலோசனையையும் நினைவில் கொள்ளுங்கள். (ரோமர் 16:17). தேவனுடைய பிரதிஷ்டை செய்தவர்களுக்கு மத்தியில் சத்தியத்தை புரட்டிப்போடுபவர்களை நாம் ஆராய்ந்து பார்ப்போம்; "**அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல், தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பாலும் இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய** [தப்பறை ஆக்கிரமிப்பதைக் குறித்து விழிப்புடன் இல்லாதவர்களின்] **இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.**" (ரோமர் 16:18). அவர்களை விட்டு விலகுங்கள்! ***

மகா சோதனைக்காக உங்களை ஆயத்தப்படுத்துங்கள்!

தற்போது நிலவுகிற இந்த "தீங்குநாளில்," இந்த "சோதனையின் காலத்தில்" நாம் உறுதியுடன் நிலைநிற்க வேண்டும். நிலைநிற்க விரும்புவோர் "கிறிஸ்தவனுடைய சர்வாயுதவர்க்கத்தை" ஜாக்கிரதையுடன் தரித்துக்கொண்டு அதைக் காத்துக்கொள்ள வேண்டும்.

எப்போதும் – உங்கள் குணாம்சத்தை வளர்ப்பதை தொடர்ந்து செய்யுங்கள்



"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." நீதிமொழிகள் 3:5-6

உலக அதிசயங்கள்: தற்செயலானவையா அல்லது தேவனுடைய செயலா?

World Wonders: Accidental or Work of God?

இன்று கிறிஸ்தவ நாடுகள் என்று பரவலாக அழைக்கப்படும் பல நாடுகளில் நாத்திகம் சகித்துக் கொள்ளப்படுவதோடு, ஆதரிக்கவும்படுகிறது. நாத்திகம் இயல்பாகவே தெய்வீக வெளிப்படுத்தலை மறுப்பதோடு, வேதாகமத்தையும் நிராகரிக்கிறது. இது குறித்து சில வேதாகம வசனங்களை நாங்கள் மேற்கோள் காட்டுகிறோம்: "**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்.**" (சங்கீதம் 14:1). "**மூடனோ இருளிலே நடக்கிறான்**" பிரசங்கி 2:14). "**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்: மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.**" (நீதிமொழிகள் 1:7). "**மூடர் பாவத்தைக்குறித்துப் பரியாசம் பண்ணுகிறார்கள்**" மற்றும் "**மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்.**" (நீதிமொழிகள் 14:9; 12:15). "**புத்தி தன்னை உடையவர்களுக்கு ஜீவஊற்று: மதியீனரின் போதனை மதியீனமே.**" (நீதிமொழிகள் 16:22). "**மூடருடைய இருதயமோ மதியீனத்தைப் பிரசித்தப்படுத்தும்;**" "**மூடர்களுடைய வஞ்சனையோ மூடத்தனம்:**" "**மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்.**" (நீதிமொழிகள் 12:23; 14:8; 15:2).

மூடரான நாத்திகர்கள் சில விஷயங்களைப் பற்றி கொண்டுள்ள கருத்துக்களும், கட்டுரையாளரான ஜிம் பிஷப் அவற்றிற்கு வழங்கிய தெளிவான மறைமுக மறுப்புகளும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

"கர்த்தருக்குப் பயப்படுதலே [பயபக்தி] ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்." (நீதிமொழிகள் 1:7).

தேவன் இல்லை–உங்களைச் சுற்றியுள்ள எல்லா அதிசயங்களும் தற்செயலானவை. எந்த ஒரு சர்வ வல்லமையுள்ள கரமும் ஆயிரம் பில்லியன் நட்சத்–திரங்களை உருவாக்கவில்லை. அவைகளே தங்களை உண்டாக்கிக்கொண்டன. எந்த ஒரு வல்லமையும் அவை–களை அதன் சீரான பாதைகளில் நிலைநிறுத்தவில்லை. சமுத்திரங்கள் சூரியனை நோக்கி விழுந்துவிடாதபடி பூமி தன்னைத்தானே காந்தமாக்கிக்கொண்டது. குழந்தைகள் பசியடையும்போதோ அல்லது காயப்படும்போதோ அழுவதற்கு தாங்களாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள். இருதய நோய்களுக்குத் தேவையான டிஜிட்டலிஸை பிரித்தெடுப்பதற்காக ஒரு சிறிய புஷ்பம் தன்னைத்தானே புதிதாக உருவாக்கிக் கொண்டது.

நமது நிலத்தினுடைய மேற்பகுதியில் ஒரு சில அங்குலங்களுக்கு மேல் மண் தற்செயலாக அமைந்து விட்டது, அது இல்லையென்றால் நாம் புசிப்பதற்கு காய்கறிகள், இருந்திருக்காது, மேலும் நமது உணவாக இறைச்சியைத் தரும் விலங்குகளுக்குப் புல்லும் இருந்திருக்காது. நமக்குத் தேவைப்படும் வரை பூமிக் கடியில் சரியான ஆழத்தில் எவரும் எண்ணெயை சேமித்து வைக்கவில்லை. மென்மையான விதையை வளமான இடத்திற்குச் சுமந்து செல்லும் காற்றானது நம்மாலேயே உருவாக்கப்பட்டது. மனித உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக சரியான அடர்த்தியைக் கொண்ட – வெறும் 50 மைல் ஆழம் மட்டுமே உள்ள – வற்றாத காற்று மண்டலமும், மற்றொரு இயற்பியல் விதிதானோ.

தற்செயல் நிகழ்வு–ஆனால் இயற்பியலைக் கண்டு–பிடித்தது யார்? பூமிக்கடியில் நிலக்கரி, துத்தநாகம், இரும்பு மற்றும் யுரேனியம் போன்றவைகளை வங்கி வைப்புகளாகச் சேமித்து வைத்தவர் யார்? எவரு–மில்லை. இவையெல்லாம் மற்றுமொரு விலைமதிப்பற்ற தற்செயலான நிகழ்வு மாத்திரமே. ஒரு குரல் ரேடியோ அலைகளின் மூலம் காற்றின் வழியாக எப்படிப் பறந்து செல்ல வேண்டும் என்று கற்றுக்கொடுத்தவர் யார்? எப்படி ஒரு படம் ஆண்டெனாவிலிருந்து வெளியேறி, நூற்றுக் கணக்கான புள்ளிகளாகக் காற்றின் வழியே நகர்ந்து, கோடிக்கணக்கான வீடுகளுக்குள் அதே துல்லியமான வரிசையில் வந்து சேர்ந்து, மீண்டும் அதே படமாக உருவாகிறது?

பூமி ஒரு குறிப்பிட்ட வேகத்தில் ஒருபோதும் அதன் வேகம் குறையாமல் சுழன்று கொண்டிருப்பதால் நமக்கு பகலும் இரவும் உண்டாகிறது, காரணம் என்ன? நாம் பருவ காலங்களைப் பெறும் வகையில் அதைச் சாய்த்து வைத்தவர் யார்? காந்த வடதுருவம் இல்லாவிட்டால் மனுஷனால் தடமறிய முடியாத பரந்த சமுத்திரங்களிலும் ஆகாயத்திலும் வழிநடத்தப்பட முடியாமல் போயிருக்கும், ஆனால் அதுகுறித்து என்னவென்று யாருக்கும் தெரியாது என்றாலும், அது அங்கே தானாகவே உருவானது.

யார் அறிவார்–மனுஷனுடைய கணையத்திற்கு கீழே உள்ள சர்க்கரை வெப்பநிலை (கட்டுப்படுத்தி/சீராக்கி) குறித்துத் தெரியுமா? அது மனிதனின் இரத்தத்தில் ஆற்றலுக்குத் தேவையான சர்க்கரை அளவை பராமரிக் கிறது, அது இல்லாவிட்டால், நாம் அனைவரும் கோமா நிலைக்குத் தள்ளப்பட்டு மரித்துப் போவோம். சூரியன் மூட்டுகிற நெருப்பு பூமியில் நாம் வாழ்வதற்குப் போது–மான மிதமான வெப்பத்தை மட்டும் தருகிறது. அது நம்மைப் பொசுக்கும் அளவுக்கு அதிக சூடாகவோ, அல்லது நம்மைக் கொல்லத்தக்கதாக அதிக குளிர்ச்சி–யாகவும் இல்லை. அந்த அக்கினியைச் சீராகப் பராமரிப்பது யார்? சூரியன் வெளியிடும் அந்த விசேஷித்த குணமாக்கும் கதிர்கள் பற்றி – யாருக்குத் தெரியும்?

ஒரு மின்விளக்கை ஒளிரச் செய்வது எது? மின்சாரமா? அது என்ன? அது ஒரு கம்பியின் மீது சிதறிப் போகாமல், மின்னல் வேகத்தில் பயணம் செய்யவும், செங்கோணத் திருப்பங்களிலும் வளைவுகளிலும் திரும்பவும் அதற்குப் பயிற்றுவித்தது யார்? அப்படியே, ஒளி என்றால் என்ன? அந்த ஒளியைக் காண்பதற்கு கண்களைப் படைத்தவர் யார்? 4,000 பாகம் (சுமார் 7.3 கி.மீ) ஆழமுள்ள கடல் நீரில் ஒளி இல்லை, அங்கே வாழும் மீன்களுக்குக் கண்கள் இல்லை. அவசியமற்ற அந்தக் கண்கள் இல்லாமல் உருவாக்கியவர் யார்?

அதிசயங்கள்–ஒரு இளம் பறவை கனடாவிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து செல்கிறது – அதற்கு எந்தப் பாதை, என்ன வேகம், அது ஏன் அவ்வாறு செய்ய வேண்டும் என்பதைப் போதித்தவர் யார்? தகைவிலான் சிட்டு குருவிகள் குறித்த நாளில் திரும்பி வருகின்றன. அவை எந்த நாட்காட்டியைப் பயன்–படுத்துகின்றன? மனிதனுக்கு மனச்சாட்சி உண்டு. வேறெந்த மிருகத்திற்கும் அது இல்லை. இதை வடிவ–மைத்தவர் யார்? மேலும் மூலிகைகளிலும், களைகளிலும் மருந்துகளை வைத்தவர் யார்? பென்சிலின் ஒரு பூஞ்சை பிடித்த தட்டில் கண்டறியப்பட்டது. அந்தத் தட்டை தூக்கி எறிந்துவிட வேண்டாம் என்று டாக்டர் ஃபிளெமிங்கிடம் (Dr. Fleming) சொன்னவர் யார்? ஒருவருமில்லையோ. அவர் ஆர்வம் மட்டுமே கொண்டிருந்தாரோ.

நாம் தங்குவதற்கு நிழல் உண்டாகும்படி, முதல் மரத்திற்கான விதைகள் எங்கிருந்து வந்தன? நம்மைக் கதகதப்பாக வைப்பதற்கு எவராவது நெருப்பை உருவாக்கினார்களா? எண்ணற்ற நூற்றாண்டுகளாக, எண்ணற்ற இடங்களில் காடுகளும் தாவரங்களும் மனுஷனுடைய உதவியின்றி தங்களைத் தாங்களே பேணிக் கொண்டன. அவை ஏன் நோயினாலும், தீயினாலும், அலட்சியத்தாலும் அழிந்து போகவில்லை?

(இதைக் குறித்து என்னவென்று சொல்வது) – மேகங்கள் மழையையும் நிழலையும் தருகின்றன. அவை எவ்வாறு நன்னீரை ஆவியாக்கி எடுத்துக் கொண்டு, அதனை தேவைப்படும் இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அவற்றுக்குப் போதித்தது யார்? உறைந்த பனி என்பது வெறுமனே குளிர்கால அலங் காரம்தானா? அல்லது மலைகளின் உச்சியில் அமர்ந்து, இளவேனிற்காலத்தின் இதமான சூரியன் அதை உருக்கி, கீழே உள்ள நீரோடைகளுக்கும் வயல்வெளிகளுக்கும் தேவையான தண்ணீராக மாற்றுவதற்காகக் காத்திருக் கிறதா? இது ஒரு மிகவும் அழகான தற்செயலான நிகழ்வோ. மேலும், இளம் பயிர்கள் அருந்துவதற்குச் சரியான நேரத்தில் அது ஏன் உருகுகிறது?

ஒரு சால்மன் மீன் தனது குஞ்சுகளைப் பெற்றெடுப் பதற்காக நீரோட்டத்திற்கு எதிராக மேல் நோக்கி நீந்திச் சென்று பின்னர் இறந்து விடும், அதற்காக அது, மீன்களுக்கான மேலேறும் பாதையின் மேல் குதித்து ஏறும். நமக்கு இன்னும் அதிக சால்மன்கள் தேவை என்பதை அந்தச் சால்மன்கள் எப்படி அறியும்? ஹவாயில் இருக்கும் ஒரு கர்ப்பமான விலாங்கு மீன் குட்டி விலாங்குகளைப் பெற்றெடுப்பதற்காக பெர்முடா வரை அவ்வளவு தூரம் ஏன் நீந்திச் செல்கிறது?

இருதயம்–மனுஷனுடைய இருதயம் தளர்ந்து போகாமல் 70 முதல் 80 வருடங்கள் வரை துடிக்கிறது. துடிப்புகளுக்கு இடையில் அதற்குப் போதுமான ஓய்வு எப்படி கிடைக்கிறது? ஒரு சிறுநீரகம் இரத்தத்திலுள்ள நஞ்சை வடிகட்டி, நல்லவற்றை அப்படியே விட்டு விடுகிறது. ஒன்றிலிருந்து மற்றொன்றை அது எப்படி அறிந்து கொள்கிறது? வார்த்தைகளை உருவாக்க மனித நாவுக்கு நெகிழ்வுத் தன்மையையும், அவைகளைப் புரிந்துகொள்ள மூளையையும் கொடுத்து, மற்ற எல்லா விலங்குகளுக்கும் அதை மறுத்தது யார்?

நோய்களுக்குத் தனிவகையான அறிகுறிகள் உள்ளன. இந்த எச்சரிக்கை ஏன்? ஏன் பல நோய்கள் ஒரே மாதிரியான அறிகுறிகளுடன் இருப்பதில்லை? அல்லது ஏன் அறிகுறிகளே இல்லாமல் இருப்பதில்லை? இரண்டு நபர்களின் அன்பைப் பெற்று, ஒரு நுண்ணிய கருமுட்டையைத் தொடர்ந்து பிளந்து, பெருகச்செய்து, சரியான நேரத்தில் ஒரு குழந்தைக்கு சரியான எண்ணிக் கையிலான விரல்கள், கண்கள், காதுகள் மற்றும் முடியைச் சரியான இடங்களில் உருவாக்கி, அந்த சிசு இவ்வுலகில் தனது ஜீவியத்தைப் பராமரித்துக்கொள்ளும் அளவுக்கு வலிமை பெற்றவுடன் உலகிற்கு அனுப்பும்படி கர்ப்பப்பைக்கு கற்றுக் கொடுத்தது யார்? யார் அது? இவையெல்லாம் தற்செயலானது தானா? தேவன் ஒருவர் இல்லையோ?

* * *



"புத்தி தன்னை உடையவர்களுக்கு ஜீவஊற்று; மதியீனரின் போதனை மதியீனமே." நீதிமொழிகள் 16:22.



வேதாகமம் பேசுகிறது

BIBLE TALKS

ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்

சென்ற இதழின் தொடர்ச்சி...

பேன்களினாலும் வண்டுகளினாலும் உண்டான வாதைகள்

யாத்திராகமம் 8:16–9:12

அப்பொழுது கர்த்தர் மோசேயினிடத்தில்: நீ ஆரோனை நோக்கி: உன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடி; அப்பொழுது அது எகிப்துதேசமெங்கும் பேன்களாய்ப் போம் என்று சொல் என்றார். அப்படியே செய்தார்கள்; ஆரோன் தன் கையில் இருந்த தன் கோலை நீட்டி, பூமியின் புழுதியின்மேல் அடித்தான்; அப்பொழுது அது மனிதர்மேலும் மிருகஜீவன்கள் மேலும் பேன்களாய் எகிப்துதேசமெங்கும் பூமியின் புழுதி யெல்லாம் பேன்களாயிற்று. மந்திரவாதிகளும் தங்கள் மந்திர வித்தையினால் பேன்களைப் பிறப்பிக்கும்படிப் பிரயத்தனஞ் செய்தார்கள்; செய்தும், அவர்களால் கூடாமற்போயிற்று; பேன்கள் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் இருந்தது. அப்பொழுது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி: இது தேவ னுடைய விரல் என்றார்கள். ஆனாலும், கர்த்தர் சொல்லியிருந்த படி பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது; அவர்களுக்குச் செவிகொடாமற் போனான்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நாளை அதிகாலமே நீ எழுந்துபோய், பார்வோன் நதிக்குப் புறப்பட்டு வரும்போது, அவனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனை செய்யும்படி என் ஜனங்களைப் போகவிடு. என் ஜனங்களைப் போகவிடாயாகில், நான் உன்மேலும், உன் ஊழியக்காரர்மேலும், உன் ஜனங்கள்மேலும், உன் வீடுகள்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவேன்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளால் நிறையும். பூமியின் நடுவில் நானே கர்த்தர் என்பதை நீ அறியும்படி என் ஜனங்கள் இருக்கிற கோசேன் நாட்டில் அந்நாளிலே வண்டுகள் வராத-படிக்கு, அந்த நாட்டை விசேஷப்படுத்தி, என் ஜனங்களுக்கும் உன் ஜனங்களுக்கும் வித்தியாசம் உண்டாகும்படி செய்வேன்; இந்த அடையாளம் நாளைக்கு உண்டாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

தேசத்தின்மேல் வண்டுகளினால் உண்டான வாதை

அப்படியே கர்த்தர் செய்தார்; மகா திரளான வண்டு ஜாதிகள் பார்வோன் வீட்டிலும், அவன் ஊழியக்காரர் வீடுகளிலும்,

எகிப்துதேசம் முழுவதிலும் வந்தது; வண்டுகளினாலே தேசம் கெட்டுப்போயிற்று. அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நீங்கள் போய், உங்கள் தேவனுக்கு தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான். அதற்கு மோசே: அப்படிச் செய்யத்தகாது; எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நாங்கள் எகிப்தியருடைய அருவருப்பை பலியிடுகிற தாயிருக்குமே, எகிப்தியருடைய அருவருப்பை நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலியிட்டால், எங்களைக் கல்லெறி வார்கள் அல்லவா? நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்குப் பலியிடுவோம் என்றான். அப்–பொழுது பார்வோன்: நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்தில் பலியிடும்படிக்கு, நான் உங்களைப் போகவிடு–வேன்; ஆனாலும், நீங்கள் அதிக தூரமாய்ப் போகவேண்டாம்; எனக்காக வேண்டுதல் செய்யுங்கள் என்றான்.

அதற்கு மோசே: நான் உம்மைவிட்டுப் புறப்பட்டபின், நாளைக்கு வண்டுகள் பார்வோனையும் அவர் ஊழியக் காரரையும் அவர் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி, நான் கர்த்தரைநோக்கி வேண்டுதல் செய்வேன்; ஆனாலும், கர்த்தருக்குப் பலியிடுகிறதற்கு ஜனங்களைப் போகவிடாதபடிப் பார்வோன் இனி வஞ்சனை செய்யாதிருப்பாராக என்றான். மோசே பார்வோனை விட்டுப் புறப்பட்டுப்போய், கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். அப்பொழுது கர்த்தர்மோசேயின் சொற்படி, வண்டு ஜாதிகள் பார்வோனையும் அவன் ஊழியக் காரரையும் அவன் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி செய்தார்; ஒன்றாகிலும் மீந்திருக்கவில்லை. பார்வோனோ, இந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, ஜனங்களைப் போக விடாதிருந்தான்.

பின்பு, கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களைப் போகவிடு. நீ அவர்களை விடமாட்டேன் என்று இன்னும் நிறுத்தி வைத்தாயாகில், கர்த்தருடைய கரம் வெளியிலிருக்கிற உன் மிருகஜீவன்களாகிய குதிரைகளின்மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின் மேலும் இருக்கும்; மகா கொடிதான கொள்ளைநோய் உண்டாகும். கர்த்தர் இஸ்ரயே லரின் மிருகஜீவன்களுக்கும் எகிப்தியரின் மிருகஜீவன்களுக்கும் வித்தியாசம் பண்ணுவார்; இஸ்ரயேல் புத்திரருக்கு உரியவைகள் எல்லாவற்றிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்.

மேலும், நாளைக்குக் கர்த்தர் இந்தக் காரியத்தை தேசத்தில் செய்வார் என்று சொல்லி, கர்த்தர் ஒரு காலத்தைக் குறித்தார் என்றும், எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றும் அவனிடத்தில் சொல் என்றார். மறுநாளில் கர்த்தர் அந்தக் காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய மிருகஜீவன்கள் எல்லாம் செத்துப்போயிற்று; இஸ்ரயேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை. பார்வோன் விசாரித்து, இஸ்ரயேலரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை என்று அறிந்தான். பார்வோனுடைய இருதயமோ கடினப்பட்டது; அவன் ஜனங் களைப் போகவிடவில்லை.

அப்பொழுது கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: உங்கள் கைப்பிடி நிறைய சூளையின் சாம்பலை அள்ளிக் கொள்ளுங்கள்; மோசே அதைப் பார்வோனுடைய கண்களுக்கு முன் வானத்திற்கு நேராக இறைக்கக்கடவன். அது எகிப்துதேசம் மீதெங்கும் தூசியாகி, எகிப்துதேசமெங்கும் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங்களை எழும்பப் பண்ணும் என்றார். அப்படியே அவர்கள் சூளையின் சாம்பலை அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்பாக வந்து நின்றார்கள். மோசே அதை வானத்துக்கு நேராக இறைத்தான்; அப்பொழுது மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எரிபந்தமான கொப்புளங் கள் எழும்பிற்று. அந்தக் கொப்புளங்கள் மந்திரவாதிகள்மேலும் எகிப்தியர் எல்லார்மேலும் உண்டானதினால், அந்தக் கொப்புளங் கள் நிமித்தம் மந்திரவாதிகளும் மோசேக்கு முன்பாக நிற்கக் கூடாதிருந்தது. ஆனாலும், கர்த்தர் மோசேயோடே சொல்லி யிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப் படுத்தினார்; அவன் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

கல்மழையினால் உண்டான வாதை
யாத்திராகமம். 9:13–35

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ அதிகாலமே எழுந்திருந்து போய், பார்வோனுக்கு முன்பாக நின்று: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு. விடாதிருந் தால், பூமியெங்கும் என்னைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நான் சகலவித வாதைகளையும் உன் இருதயத்திலும், உன் ஊழியக்காரர் மேலும் உன் ஜனங்கள் மேலும் அனுப்புவேன். நீ பூமியில் இராமல் நாசமாய்ப் போகும்படி நான் என் கையை நீட்டி, உன்னையும் உன் ஜனங்களையும் கொள்ளை நோயினால் வாதிப்பேன். என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக் கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாப மாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன். நீ என் ஜனங்களைப் போகவிடாமல், இன்னும் அவர்களுக்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயோ.

எகிப்து தோன்றிய நாள்முதல் இதுவரைக்கும் அதில் பெய்யாத மிகவும் கொடிய கல்மழையை நாளை இந்நேரம் பெய்யப்பண்ணுவேன். இப்பொழுதே ஆள் அனுப்பி, உன் மிருகஜீவன்களையும் வெளியில் உனக்கு இருக்கிற யாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே சேர்க்கப்படாமல் வெளியிலிருக்கும் ஒவ்வொரு மனிதனும் மிருகமும் செத்துப்போகத்தக்கதாய் அந்தக் கல்மழை பெய்யும் என்று எபிரெயரின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுக்குச் சொல் என்றார். பார்வோனுடைய ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த் தைக்குப் பயப்பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணினான். எவன் கர்த்தருடையவார்த்தையை மதியாமற்போனானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மிருகஜீவன்களையும் வெளியிலே விட்டுவிட்டான்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: எகிப்துதேசம் எங்கும் மனிதர்மேலும் மிருகஜீவன்கள்மேலும் எகிப்துதேசத் திலிருக்கிற சகலவிதமான பயிர்வகைகள் மேலும் கல் மழை பெய்ய, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார். அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான். அப்பொழுது கர்த்தர்இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார்; அக்கினி தரையின்மேல் வேகமாய் ஓடிற்று, எகிப்துதேசத்தின்மேல் கர்த்தர்கல்மழையைப் பெய்யப்பண்ணி–னார். கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருந்தது; எகிப்துதேசம் குடியேற்றப்பட்ட நாள்முதல் அதில் அப்படி ஒருபோதும் உண்டானதில்லை. எகிப்துதேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக் கல்மழை அழித்துப்போட்டது; அதுவெளியின் பயிர்வகை–களையெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப்போட்டது. இஸ்ரயேல் புத்திரர் இருந்த கோசேன் நாட்டிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.

அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: நான் இந்த முறை பாவம் செய்தேன்; கர்த்தர்நீதியுள்ளவர்; நானும் என் ஜனமும் துன்மார்க்கர். (இது போதும்); இந்த மகா இடிமுழக்கங்களும் கல்மழையும் ஒழியும்

படிக்கு, கர்த்தரைநோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள்; நான் உங்களை போகவிடுவேன், இனி உங்களுக்குத் தடை இல்லை என்றான். மோசே அவனை நோக்கி: நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டவுடனே, என் கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை நின்றுபோம்: அதினால் பூமி கர்த்தருடையதுஎன்பதை நீர் அறிவீர்.

ஆகிலும் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னும் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படமாட்டீர்கள் என்பதை அறிவேன் என்றான். அப்பொழுது வாற்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்ப்பயிருமாயிருந்தது; அதினால் சணலும் வாற்கோதுமையும் அழிக்கப்பட்டுப்போயிற்று. கோதுமையும் கம்பும் கதிர்விடாதிருந்ததால், அவைகள் அழிக்கப்படவில்லை. மோசே பார்வோனைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, தன் கைகளைக் கர்த்தருக்குநேராக விரித்தான்; அப்பொழுது இடிமுழக்கமும் கல்மழையும் நின்றது; மழையும் பூமியில் பெய்யாமலிருந்தது. மழையும் கல்மழையும் இடிமுழக்கமும் நின்றுபோனதைப் பார்வோன் கண்டபோது, அவனும் அவன் ஊழியக்காரரும் பின்னும் பாவம் செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள். கர்த்தர் மோசேயைக் கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை. ***

LHMM - புஸ்தக வெளியீடு



ஓவர்லேண்ட் மாதாந்திர பத்திரிக்கைக்கு

ரசல் போதகர் எழுதியது என்ன

ஒரு புஸ்தகத்தின் விலை: ரூ.450. இந்த புஸ்தகம் தேவைப்படுபவர்கள் கீழ்க்காணும் முகவரியைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

2026-ம் ஆண்டிற்கான நமது கர்த்தருடைய ஞாபகார்த்த பஸ்கா மார்ச் மாதம் 31-ம் தேதி செவ்வாய்கிழமை சாயங்காலம் 6.00 மணிக்குமேல் என்பதை அறிவிக்கிறோம்.

Visit us at : **www.biblestandardindia.com**

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Laymen's Home Missionary Movement

Bro. V. Vincent Jeyakumar

[Representative of India]

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY